**அரசு ஊழியர்**

மே 2017

மலர் : 38 இதழ் : 5

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக வெளியிடுபவர் :
இரா.பாலசுப்பிரமணியன்

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:வைகை பிரிண்டர்ஸ்&பப்ளிஷர்ஸ்,
2/38, குயவர் வீதி, ஜோன்ஸ் சாலை,
சென்னை - 600 015.

ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8

**சூடா ஒரு கோப்பை சூப்**

# விட்டுவிடாதீர்!

சில சமயம் வாழ்க்கையில்
காரியங்கள் கைமீறிப் போகும்போது…
சிரமப்பட்டு நடக்கும் சாலையெல்லாம்
செங்குத்து மலையாய்த் தோன்றும்போது…
நிதிவரவு குறைவாயும்,
கடன்செலவு அதிகமாயும் இருக்கும்போது…
புன்னகைக்க விரும்பியும்
பெருமூச்சே சாஸ்வதமாகும்போது…
எதையும் தாங்கும் இதயத்தை
கவலைகள் ஏறி நின்று அழுத்தும்போது…
தேவையெனில் சற்று ஓய்வெடுங்கள் - ஆனால்
முயற்சி எனும் போராட்டத்தை விட்டுவிடாதீர்கள்.
ஏனெனில்,
வாழ்க்கையும், போரட்டமும் அவற்றுக்கேயுரிய
நெளிவு சுளிவுகளைக் கொண்டவை!

# இலக்கு நோக்கிய பயணம் தொடரட்டும்!

திருவண்ணாமலை மாநில மாநாட்டின் முடிவின்படி 2017 ஏப்ரல் 25 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் மேற்கொள்ள திட்டமிட்டு, அதனை வெற்றிகரமாக்கிட ஏப்ரல் 8-ல் மாவட்டங்களில் ஆயத்த மாநாடும், ஏப்ரல் 15-ல் திருச்சியில் மாநில ஆயத்த மாநாடும், ஏப்ரல் 17 முதல் 21 வரை எழுச்சியான பிரச்சார இயக்கமும் மிகச்சிறப்பாக நடத்தினோம். அரசின் மௌனத்தின் காரணமாக ஏப்ரல் 25 அன்று திட்டமிட்டபடி காலவரையற்ற வேலைநிறுத்தம் தொடங்கியது. அன்றைய போராட்டத்தில் லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள் ஆவேசத்துடன் பங்கேற்றார்கள். போராட்ட குழுவை சார்ந்த துறைவாரி சங்கங்கள் தன்னுடைய முழுமையான பங்களிப்பினை செலுத்தியது.

போராட்டம் துவங்குவதற்கு முன்னதாக 24.04.2017 அன்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தொடர்பு கொண்டு பேசி முடிக்கலாம் எனவும், நமது வேலை நிறுத்தம் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கடிதத்தினை தலைமைச் செயலாளரிடம் வழங்கிட தெரிவித்த சூழ்நிலையில், தலைமைச் செயலாளரிடம் நம் சார்பாக கடிதம் அளிக்கப்பட்டது. தலைமைச் செயலாளர் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பில்லை எனவும், அரசுக்கு அங்கீகாரம் பெற்ற சங்கங்கள் ஆதரவளிக்கிறது எனவும் இறுமாப்புடன் தெரிவித்து விட்டார். தலைமைச் செயலாளரின் அதிகார வர்க்க அணுகுமுறை நம்மிடையே கோபத்தை இன்னும் அதிகரித்து, 25.04.2017 அன்று காலவரையற்ற வேலை நிறுத்தம் எழுச்சியோடு துவங்கியது. அன்றைய தினம் அனைத்து மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் மிக சக்தியாக நடந்துள்ளது. இந்த போராட்டத்தின் போது விவசாயிகளுக்கான ஆதரவினையும் நாம் தெரிவித்தோம்.

வேலை நிறுத்தம் இரண்டாவது நாள் சக்தியாக தொடர்ந்த நிலையில் அடுத்த கட்ட போராட்டத்தை மறியல், காத்திருப்பு போராட்டம் உட்பட எழுச்சியாக நடத்திட போராட்டக் குழுவை 26.04.2017 அன்று கூட்டினோம். போராட்டத்தின் எழுச்சியை கண்ட தமிழக அரசின் மௌனம் கலைந்தது. மாண்புமிகு கல்வி அமைச்சரின் முயற்சியில் நமது சங்கத்தை பேச்சுவார்த்தைக்கு நிர்வாகம் அழைத்தது.

தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர், வருவாய்த்துறை அமைச்சர், நிதித்துறை அமைச்சர், நிதித்துறை செயலாளர் ஆகியோர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையின்போது அனைத்து கோரிக்கைகளின் நியாயத்தை முன்வைத்தோம். மேலும், ஊதியக் குழு அறிக்கை இறுதி செய்யப்படுவதற்கு முன் அனைத்து சங்கங்களையும் அழைத்து பேசவும், சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலர், கிராம உதவியாளர் போன்றோர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கிட இந்த ஊதியக்குழு பரிசீலிக்கும் எனவும், சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலம் வரன்முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து குறித்தும் விரிவாக ஜூலை இறுதிக்குள் பேச்சுவார்த்தை மூலம் முடிவெடுக்கப்படும் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்று போராட்டக் குழுவில் கலந்து பேசி இன்றைய வறட்சி, அரசியல் சூழ்நிலை மற்றும் மக்கள் நலன் கருதி போராட்டத்தை ஜூலை இறுதி வரை தற்காலிகமாக ஒத்தி வைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த வேலை நிறுத்த போராட்டத்தை வலிமையாக மாற்றிய அரசு ஊழியர் சங்க மாநில, மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகள், துறைவாரி சங்கத் தலைவர்கள், ஆதரவளித்த அமைப்புகள், ஊடகங்கள், காவல் துறை உள்ளிட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர்களே! நம்மோடு பேசமுடியாது என்று இருந்த அரசு நிர்வாகத்தின் போக்கினை தகர்த்தெறிந்து ஊழியர் நலனில் அக்கறை இல்லாத அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களை புறந்தள்ளி, நம்மோடு மட்டுமே அரசு பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது, வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு கிடைத்த முதல் வெற்றி. சிறப்புக் காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு இந்த ஊதியக் குழுவில் காலமுறை ஊதியம் வழங்கிட பரிசீலிக்கப்படும் என நிதித் துறை செயலாளரே ஏற்றுக்கொண்டு உறுதியளித்தது நமது போராட்டத்தில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். இந்தப் போராட்டத்தின் முன்னேற்றத்தை அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தெரிவிக்கும்வண்ணம் விளக்க கூட்டங்களை நடத்திட வேண்டும்.

அதே நேரத்தில் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை பேச்சுவார்த்தையின் போது ஏற்றுக்கொண்டபடி பரிசீலித்து ஜூலை இறுதிக்குள் நிறைவேற்றிட, நமது வேலை நிறுத்த போராட்டத்தை ஒரு "அடையாள எச்சரிக்கை போராட்டம்" என்பதை உணர்ந்து கொண்டு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நம்புகிறோம்.

அதுவரை நம்முடைய ஸ்தாபன கடமைகளான உறுப்பினர் சேர்க்கை, பத்திரிக்கை சந்தா சேகரிப்பு போன்ற பணிகளையும் இக்காலகட்டத்தில் நிறைவு செய்ய வேண்டும்.

அரசின் மீது நம்பிக்கை வைத்து ஜூலை இறுதி வரை காத்திருப்போம். தவறும் பட்சத்தில் நமது இலக்கு நோக்கிய போராட்ட பயணத்தை இன்னும் தீவிரமாக தொடருவோம். அதுவரை நமது பயணங்கள் முடிவதில்லை. ❖

## சர்வதேச மகளிர் தினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கடலூர் மாவட்டம் சார்பில் 30.3.2017 அன்று மாலை சர்வதேச மகளிர் தின விழா மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள் ஆர்.முத்தமிழ்செல்வி, எல்.சுகந்தி, ஆர்.சுகன்யா, ஜெ.பானுமதி ஆகியோர் முன்னிலையில், மகளிர் துணைக் குழு அமைப்பாளர் ஜெ.ஜானசிராணி தலைமையில் நடைபெற்றது.




முன்னதாக அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் டி.ரவிச்சந்திரன் வரவேற்றார். மாவட்ட இணைச் செயலாளர் ப.துளசி துவக்கவுரையாற்ற, மாவட்டச் செயலாளர் எல்.அரிகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட செயலாளர் நா.காசிநாதன், வட்டச் செயலாளர் பா.ஆசைத்தம்பி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநிலச் செயலாளர் எல்.ஜனார்த்தனன் நிறைவுரையாற்றினார். ❖

# கோயபல்ஸ் பேசுகிறேன்!

'தூய்மை பாரதம்'
வாய்மையோடு பேசும்போதே
அகத்தூய்மை பற்றி
வினா எழுப்புவது ஏனோ...
புறத் தூய்மையில்
நாளொரு ஆடையலங்காரத்தில்
பவனி வருவது
பாரதத்துக்குப் பெருமைதானே..

அகண்ட பாரதம்-ஆயினும்
ஒற்றை மதம்
ஒற்றை கலாச்சாரம்
பற்ற வைத்தது
திக்கெட்டும் பரவியது
சாதனை சிகரம்தானே...

விஞ்ஞான யுகத்தில்
அஞ்ஞானம் பேசுவதாய்
கதையளப்பதேன்?
வீதிதோறும் ஆலயம்
ஆலயந்தோறும் குடமுழக்கு
அர்ச்சனை ஆராதனைகள்
பக்தி மயக்கத்தில் திளைத்தலில்
சக்தி கூடுமன்றோ?

கோமாதா வழிபாடு
மறந்துகொண்டேயிருப்பது
மனித இயல்பு
பசுவதைத் தடை
நினைவுபடுத்தித் தூண்டினால்
அயலகத்துக்கு
இறைச்சி ஏற்றுமதி ஏன்?
வினா எழுப்புவது
வணிகம் குலைக்கவோ?
தடை மீறி மாட்டிறைச்சி
படையெடுத்து சோதித்தால்
தலித் மீதான தாக்குதலென
புலம்புவதேனோ?

கருப்புப் பணம்
கள்ளப் பணம்
வெள்ளமெனப் பாய்ந்த தேசமிது
ஒரு பனி இரவின்
அறிவிப்பில்
அதிர்ந்தது தேசம்
உதிர்ந்தது சில உயிராயினும்
பறந்தது கறுப்புப் பணமன்றோ?
சிறந்ததெனச் சொன்னால்
குறைந்தா போவீர்..!

எனதருகிலேயே போரா?
வேளாண்மை மக்களின் வேரா?
எலிக்கறி பாம்புக்கறி
கலிமுற்றி உண்ணலாகுமா?
அசைவத்திவிருந்து
சைவத்திற்கு மாறலே சிகரம்!

இடித்து ஆனது கால் நூற்றாண்டு
துடித்துக் கிளம்பினால்
நாடு தாங்காது
மக்கள் விருப்பமே
மகேசன் விருப்பமானது
ஆலயம் அமைக்கவே அங்கீகாரம்
உ.பி.யில் ஆலயம்
உதவாக்கரை வெறுங் கனவல்ல
நனவாகும் நற்காரியம்
சிறுபான்மை வேட்பாளரின்றி
சிம்மாசனம் அமர்த்தியது
சும்மா அல்ல...

பல்கலையில் பாடம் மட்டுமே
படிக்கச் சொல்வது குற்றமா?
துடிப்புடன் மாணவர்
வெடிப்புறப் பேசலும்
நாட்டு நடப்பு அலசலும்
வேட்டு வைத்தாலன்றி
நாடு திருந்தாது

விலைவாசி உயர்வும்
வேலையின்மை அயர்வும்
வழமையானதுதானே...
பழமையெல்லாம் மறந்தா போனது
சமாதி நிகர்
அமைதி கொள்ள
யோகாவில் மோகம் கொள்
ஆதியோகி சிலை திறக்க
காத தூரம் வந்ததன் காரணம்
இப்போதாவது புரிகிறதா?

யோகம் வரும்!
போகம் தரும்!


- **பெரணமல்லூர் சேகரன்**

# சற்றே இளைப்பாறுவோம்,
# வெற்றிக்கான வியூகங்களை வகுத்துக்கொண்டே!

நன்றாக நினைவிருக்கிறது 22.6.1988ல் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் நடத்திய முழுமையான வேலை நிறுத்தப் போராட்டம். 8 லட்சம் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் பங்கேற்று வரலாறு படைத்த 31 நாள் வேலை நிறுத்தப் போராட்டம் அது. மத்திய அரசுக்கு இணையான ஊதியம், ஒரு மாத ஊதியம் போனஸ் ஆகியவற்றை கொள்கை அளவில் அரசை ஏற்றுக்கொள்ள வைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டம். அந்தப் போராட்டத்தில் பழிவாங்கும் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வில்லை. தற்காலிகப் பணியாளர்கள் பணிமுறிவு ஏதுமின்றி மீண்டும் பணிக்கு சேர்த்துக்கொள்ளப் பட்டனர். 31 நாள் வேலை நிறுத்தத்தில் 22 நாட்கள் ஈட்டிய விடுப்பில் கழிக்கப்பட்டது. இடைக்கால நிவாரணமாக ரூ.70/-ம் மருத்துவப்படியாக ரூ.15/-ம் வழங்கப்பட்டது. தொழில் வரியை அரசே ஏற்றுக் கொண்டது இது போன்ற பல முக்கிய பயன்களை அரசு ஊழியர்கள் அப்போது பெற்றோம். 1988ம் ஆண்டில் நாம் இந்தப் போராட்டத்தை நடத்திய போது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் இல்லை. அப்போது தமிழகத்தில் கவர்னர் ஆட்சிதான் நடந்து கொண்டிருந்தது. ஆளுநரின் ஆலோசகரோடு 3 நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதிகார வர்க்கத்தின் தலையீடு அப்போதும் இருந்தது. ஆனால், ஆளுநர் அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு தீர்வுகாண முனைப்பு காட்டினார். முடிவும் நல்லவிதமாக அமைந்தது.

2003ல் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் மீண்டும் ஒரு காலவரையற்ற போராட்டத்தை கையிலெடுத்தோம். அப்போது தமிழக முதல்வராக இருந்தவர் செல்வி ஜெயலலிதா. அவர் அதிகார வர்க்கத்தின் கைப்பாவையாக மாறி சட்டசபையிலேயே அரசு ஊழியர்கள் போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என்றும் மீறி போராடினால் எஸ்மா, டெஸ்மா உள்ளிட்ட அனைத்துச் சட்டங்களும் பாயும் என்றும், தமிழக மக்கள் தொகையில் அரசு ஊழியர்கள் வெறும் 2 சதவீதம் பேர் மட்டுமே. அவர்களின் ஓட்டுக்கள் அ.தி.மு.க.விற்கு தேவையில்லை என்றும் ஆர்ப்பரித்தார். அவர் பேச்சுக்களுக்கு அரசு ஊழியர்கள் பயப்படவில்லை. மாறாக உக்கிரமான காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தோம். கோபமுற்ற ஜெயலலிதா ஒரே அரசாணையில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் பேரை டிஸ்மிஸ் செய்தார். அப்போதும் நாம் மனம் தளராமல் போராட்ட களத்தில் நின்றோம். ஆனால் சில சங்கங்கள் போராட்டத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றதால் போராட்டத்தின் திசைவழி மாறியது. பிறகு உச்சநீதிமன்ற உத்தரவுக்குப் பின்னர் டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்கள் பணியில் சேர்க்கப்பட்டனர். அரசு ஊழியர்களை துச்சமென நினைத்து அதிகார வர்க்கத்தின் பாட்டுக்களுக்கு தாளம்போட்ட செல்வி ஜெயலலிதாவின் அரசாங்கத்தை, மக்கள் சந்திப்பு பிரச்சாரம், வாகனப் பிரச்சாரம், மாவட்டம்தோறும் பிரச்சாரம் என பலகட்ட இயக்கங்களை நடத்தி அடுத்த தேர்தலில் அம்மையாரின் ஆட்சி தோற்றுப்போக தொண்டாற்றி பகை முடிக்கும் பணி முடித்தோம். திமுக 2006ல் ஆட்சிக்கு வந்த பின்னர் ஜெயலலிதா ஆட்சியில் இழந்த உரிமைகளான சரண்விடுப்பு, அகவிலைப்படி உயர்வு நிலுவைத்தொகைகளை ரொக்கமாக வழங்குதல் போன்றவற்றை திரும்பப் பெற்றோம். எதற்கும் அஞ்சாத இரும்புப் பெண்மணி என்று அழைக்கப்பட்ட ஜெயலலிதாவையே எதிர்த்து நின்று போராடிய எஃகு கோட்டை வீரர்கள் என்று அரசு ஊழியர்கள் நாம் பெயரெடுத்தோம்.

ஜெயலலிதாவும் அதிகார வர்க்கத்தின் தவறான வழிகாட்டுதலின் பேரில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை பகைத்துக் கொண்டு சோரம் போய்விட்டதை அரியணை இழப்புக்குப் பின் உணர்ந்தார். அதன்பிறகு 2011ல் மீண்டும் அரியணை ஏறியதும் அரசு ஊழியர்களை அழைத்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக நிலைமையை கொண்டு வருவதாக கூறினார். 2011ல் தேர்தல் அறிக்கையில், தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் புதிய பென்சன் திட்டம் திரும்ப பெறப்பட்டு பழைய பென்சன் தொடர வழிவகை காணப்படும் என்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு கால முறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார்.



ஆனால் 2011ல் பதவியேற்று நான்கரை ஆண்டுகள் ஆகியும் தான் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றாததால் நாம் மீண்டும் ஒரு காலவரையற்ற போராட்டத்திற்குத் தயாரானோம். அதிமுக என்ற எஃகு கோட்டையின் இரும்புத் தலைவி ஜெயலலிதா என்றும் அவரிடம் உரிமைகள் கேட்டு காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் அரசு ஊழியர்கள் ஈடுபடுவது அவர்களுக்கே ஆபத்தாக முடியும் என்று வெளியிலிருந்து பல பேரும், 2003 அரசு ஊழியர் போராட்டத்தின் போது ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை நினைவுபடுத்தி வேறு சிலரும் நம்மை பயமுறுத்திய போதும் நாம் 2016 பிப்ரவரியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் துணிந்து இறங்கினோம். போராட்டத்திற்கு போகுமுன் ஐந்து அமைச்சர்கள் நம்முடன் பேச்சு வார்த்தை நடத்தி போராட்டத்தை முடித்துக் கொள்ள கேட்டபோது நாம் எழுத்துபூர்வமான உறுதிமொழியோ அல்லது சட்டமன்றத்தில் அறிவிப்போ முதல்வர் வெளியிட்டால் மட்டுமே போராட்டத்தின் அடுத்த கட்டத்தைப்பற்றி யோசிப்போம் என்று கூறினோம். அன்று நம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட ஐந்து அமைச்சர்களில் தற்போது முதலமைச்சராக இருக்கும் திரு,எடப்பாடி பழனிச்சாமி அவர்களும், அதிமுக அரசாங்கத்தின் முன்னாள் முதல்வராக இருந்த திரு.பன்னீர் செல்வம் அவர்களும் அடங்குவர். நம்முடைய போராட்டத்தின் வலிமையையும், போராட்டத்தின் நியாயத்தையும் உணர்ந்த முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 19.2.2016ம் தேதி தமிழக சட்டப்பேரவையில், சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் 11 அறிவிப்புகளை வெளியிட்டார். அந்த அறிவிப்புகளுக்குப் பிறகே நாம் நம்முடைய வேலை நிறுத்தப் போராட்டத்தை விலக்கிக் கொண்டோம்.

ஆக, கடந்த கால அனுபவங்களிலிருந்து, நடப்பது கவர்னர் ஆட்சியாக இருந்தாலும், ஆள்வது இரும்பு மனுஷியாக இருந்தாலும், எதிர்ப்பது எஃகு கோட்டையே ஆனாலும் நாம் நம்முடைய உரிமைகளைக் காப்பதிலிருந்து பின்வாங்கி அவற்றுடன் சமரசம் செய்து கொண்டதில்லை. அதன் அடிப்படையில்தான் இப்போதும் நாம் 2006லிருந்து நமக்கு வழங்கப்படாமல் தடுக்கப்பட்டிருக்கும் உரிமைகளுக்காக தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வந்திருக்கிறோம். 2008ல் அலுவலர் குழுவானாலும் சரி, அதற்கடுத்து போடப்பட்ட ஒரு நபர் குழுவானாலும் சரி, அதற்குப் பின் வந்த குறைதீர்க்கும் குழுவானாலும் சரி நாம் நம்முடைய கோரிக்கைகளை தொய்வின்றி அவைகளிடம் சமர்ப்பித்து அவை சரி செய்யப்படாத நிலையில் அடுத்த கட்ட போராட்டங்ளுக்கு நகர்ந்து வந்திருக்கிறோம்.

2016ல் தமிழக சட்டப்பேரவையில், சட்டபேரவை விதி எண்.110ன் கீழான அறிவிப்பில் மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகளில் முக்கிய அறிவிப்புகளான காலமுறை ஊதியம் ஒழிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும், புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெற்று பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடருவதற் காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழு இதுவரை நான்குமுறை காலநீட்டிப்பு செய்யப்பட்டும் அரசுக்கு அறிக்கை சமர்பிக்காத போக்கும், வெறும் காகித அறிவிப்புகளாகவே உள்ள நிலையில் அவற்றை செயல்பாட்டிற்கு கொண்டு வரவும், சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை உந்தித்தள்ளவும், ஊதிய மாற்ற வித்தியாசத் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதமானம் இடைக்கால நிவாரணமாக பெறுவதன் மூலம் சென்றமுறை ஒரு வருட நிலுவையை இழந்த ஏமாற்றத்தை தவிர்க்கும் பொருட்டும், நாம் நம்முடைய 12வது மாநில மாநாட்டில் காலவரையற்ற வேலைநிறுத்த அறைகூவல் விடுத்தோம்.

கடந்த செப்டம்பர் 22ம் தேதி ஜெயலலிதா அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் செயலிழந்த தமிழக அரசு, செயல்படாத அரசாக மாறிப்போனதும், அவருடைய மறைவுக்குப் பின்னர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் முதல்வரானதும், சசிகலாவின் குடும்ப அரசியல் குழப்பத்தால் அவர் தன் முதல்வர் பதவியை ராஜினாமா செய்ததும், அதன்பிறகு தியானப் புரட்சி செய்து சசிகலாவுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்ததும், முதல்வர் கனவில் இருந்த சசிகலா சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று சிறை சென்றதும், அதன்பிறகு கட்சியையும் ஆட்சியையும் டி.டி.வி.தினகரன் ஆட்டிப்படைத்ததும், ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் தினகரனே தன்னை வேட்பாளராக அறிவித்துக் கொண்டதும், தேர்தல் ஆணையத்தால் இரட்டை இலைச் சின்னம் முடக்கப்பட்டு வேறு சின்னங்கள் அதிமுக அணிகளுக்கு வழங்கப்பட்டதும், எப்படியாவது ஜெயித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் பணத்தை கோடிகோடியாக தினகரன் வாரியிறைத்ததும், அதை பட்டுவாடா செய்த அமைச்சர் விஜயபாஸ்கர் அமலாக்கத்துறையினர் வளையத்துக்குள் சிக்கிக் கொண்டதும், இரட்டை இலை

சின்னத்தை தங்கள் அணிக்கு சாதகமாகப் பெற தேர்தல் ஆணையத்துக்கு ரூ.60 கோடி தினகரன் பேசியதாக இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் என்பவரை டெல்லி காவல்துறையினர் கைது செய்ததும், அவர் கொடுத்த தகவலின் பேரில் தினகரனை டெல்லி போலீசார் விசாரணை செய்து கைது செய்திருப்பதும், ஆட்சியை காப்பாற்றிக்கொள்ள இரு அணிகளும் ஒன்று சேர்வதாக அறிவிப்புகள் வெளியாகி அதிலும் சில நிபந்தனைகள், சில சிக்கல்கள் என பிரச்சனைகள் நீண்டு கொண்டு போக... தமிழக அரசியல் களம் திக்குத் தெரியாத காட்டில் திசை தெரியாமல் விக்கி நிற்கும் சிறுவனைப் போல் நின்று கொண்டிருக்கிறது.

நேற்று பன்னீர் செல்வத்தை துரோகி என்றும், தினகரனை தியாகி என்றும் பேசிய சில அமைச்சர்களும் எம்எல்ஏக்களும் இன்று அதை புரட்டிப்போட்டுப் பேசுகிற சூழலில், எப்படியாவது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஆளும்கட்சி எம்,எல்.ஏ.க்களும் அமைச்சர்களும் அலைந்து கொண்டிருக்கும் வேளையில், பன்னீர் செல்வமும், எடப்பாடி பழனிச்சாமியும் நான்தான் முதல்வர், நான்தான் முதல்வர் என்று ஒருவருக்கொருவர் முட்டிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழக மக்கள் நிலையான ஆட்சிக்காகவும், திடமான முதல்வருக்காகவும், வளமான தமிழகத்திற்காகவும் ஆழ்ந்திருக்கிறார்கள் கவலையில்.

இப்படிப்பட்டதொரு அசாதாரண சூழ்நிலையில் நாளுக்கு நாள் மாறும் ஆளும்கட்சி அரசியலில் நம்முடைய போராட்டம் உக்கிரமடைந்து போராட்ட களம்வரை வந்துவிட்ட பிறகு, நமது அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தும் கோரிக்கைகளை கேட்கின்ற நிலையில் முதல் அமைச்சரோ அல்லது அமைச்சர்களோ இருக்கிறார்களா? என்ற ஐயப்பாடுகள் நம்மில் சிலருக்கு எழுந்ததும் உண்மையே. 1988ல் கவர்னர் ஆட்சி நம் எதிரில் இருந்தது. 2003ல் ஜெயலலிதா இருந்தார். 2016 வாக்கிலும் அவரே எதிரில் இருந்தார். இன்றுவரை வரை எடப்பாடி பழனிச்சாமி இருக்கிறார். எப்படியும் அரசாங்கம் என்ற ஒன்று இருக்கும். ஒருவேளை அரசாங்கமே போனாலும் கவர்னர் இருப்பார். யாராக இருந்தாலும் முன்வைத்த காலை பின் வைக்க வேண்டியதில்லை, போராடிப் பார்த்துவிடலாம் என்று, ஒருபுறம் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை திறந்து வைத்துக்கொண்டே மறுபுறம் போராட்டத்திற்கு ஆயத்தமானோம்.

15.04.2017ம் தேதி திருச்சியில் நடந்த காலவரையற்ற வேலைநிறுத்த ஆயத்த மாநாட்டிற்குப் பின் அரசாங்கத்திலிருந்து எந்தவித சமிஞ்சையும் வராத நிலையில், 25.04.2017ஆம் தேதியிலிருந்து நடைபெறும் காலவரையற்ற போராட்டத்திற்கான தினசரி நிகழ்ச்சி நிரலை தீர்மானிக்க 22.04.2017ம் தேதி மாநில நிர்வாகிகள் கோவையில் கூடியிருந்தபோது, அமைச்சர் செங்கோட்டையன் சங்க நிர்வாகிகளை தொடர்பு கொண்டு போராட்டத்தை கைவிடுமாறும் அரசாங்கம் நிலுவை கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்திட தயாராக உள்ளதாகவும் தொலைபேசி மூலம் தெரிவித்தார். ஆனால் ஏற்கெனவே இதுபோன்ற போராட்டங்களில் நமக்கு ஏற்பட்டிருந்த அனுபவங்கள் காரணமாக நாம் அமைச்சரிடம், பேச்சுவார்த்தைக்கு கடிதம் மூலமாக அழைப்பு விடுத்தால் மட்டுமே பேச வரமுடியும் என்று தெரிவிக்க, அமைச்சரும் அதற்கு ஒப்புக் கொண்டார். 24.4.2017ம் தேதி அழைப்பு கடிதம் பெற மாநில நிருவாகிகள் தலைமைச் செயலாளரின் அலுவலகத்திற்கு சென்றபோது தலைமைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன் அவர்கள், போரட்டம் குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தோடு பேச வேண்டிய அவசியம் இல்லை என்றும், அரசுக்கு ஆதரவாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபடுவதில்லை என ஆதரவு கடிதம் கொடுத்துள்ளதாகவும், எனவே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவதானால் நடத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். போராட்டம் நடத்துபவர்களின் கோரிக்கைதான் என்ன என்பதை கொஞ்சம்கூட காது கொடுத்துக் கேட்காத அவருடைய அக்கரையற்றப் பேச்சு அதிகார வர்க்கத்திடம் அரசாங்கம் அடகுபோயுள்ளதை அப்பட்டமாக காட்டியது. தலைமைச் செயலாளரின் பேச்சும், போக்கும் நம் கோபத்தை அதிகப்படுத்தி உரிமைக்கான போரில் இனி சமரசம் இல்லை என்ற நிலைப்பாட்டினை எடுக்க வைத்து உக்கிரமானதொரு போராட்டத்துக்கு நம்மை நெம்பித் தள்ளியது.

25.04.2017ம் தேதி தொடங்கிய காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் விவசாயிகளுக்கு ஆதரவான போராட்டமாக மாறியிருந்த போதிலும் அதை நாம் பிரச்சார இயக்கமாகவும் நடத்தினோம். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடந்த இந்த பிரச்சார இயக்கத்தில் நம் சங்க மாவட்ட, மாநில நிர்வாகிகளின் ஆவேசப் பேச்சுக்களும், அதைக்கேட்டு நம் ஊழியர்களுக்கு அரசின் மீது எழுந்த

கோபங்களும், பெரும்பாலன அரசு அலுவலங்கள் வெறிச்சோடிக் கிடந்த காட்சிகளும், தலைமைச் செயலாளரின் தான்தோன்றித் தனமான அணுகுமுறையும் அரசாங்கத்துக்கும், அமைச்சர்களுக்கும் சென்று சேர்ந்ததும் இரண்டாவது நாள் போராட்டத்தின் காலை வேளையிலேயே பேச்சு வார்த்தைக்கான அழைப்பு நமக்கு வந்து சேர்ந்தது.

தலைமைச் செயலகத்தில் உயர்கல்வி அமைச்சர் செங்கோட்டையன், நிதி அமைச்சர் ஜெயக்குமார், வருவாய்த் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் மற்றும் நிதித்துறைச் செயலாளர் கே. சுண்முகம் ஆகியோர் முன்னிலயில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நமது மாநில நிர்வாகிகள் நம்முடைய ஆறு அம்ச கோரிக்கைகளை எடுத்துவைத்தனர். கடந்த ஊதிய மாற்றத்தின் போது நிகழ்ந்த முரண்பாடுகளையும், அலுவலர் குழு, ஒருநபர் குழு, குறை தீர்க்கும் குழு என அரசாங்கம் குழுக்களுக்கு மேல் குழுக்கள் போட்டு செய்த குளறுபடிகளைப் பட்டியலிட்டு அந்த ஊதிய மாற்ற அலுவலர் குழுவில் இருந்த நிதித்துறை செயலாளரே இப்போதுள்ள அலுவலர் குழுவில் இடம் பெற்றுள்ளதையும், கடந்த 11 ஆண்டுகளாக உள்ள ஊதிய முரண்பாடுகளும், குளறுபடிகளும் சரிசெய்யப்படாத நிலையில் அலுவலர் குழு, ஊதிய மாற்றம் குறித்த தனது பரிந்துரைகளை இறுதிப்படுத்துவதற்கு முன்னர், அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களை அழைத்து, விரிவான நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி, கருத்தொற்றுமையின் அடிப்படையில் ஊதிய மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவதை முதலமைச்சர் ஏற்று தன்னுடைய அறிக்கையில் தெரிவித்த பிறகும், அது பற்றிய விபரம் அலுவலர் குழு அரசாணையில் இருட்டடிப்பு செய்யப்பட்டதையும், அது குறித்து கடிதம் கொடுத்து முதலமைச்சர் அறிக்கையை சுட்டிக்காட்டிய பிறகே சங்கங்களின் கருத்துக்களை கேட்க அலுவலர் குழு ஒப்புக்கொண்டதையும், அப்போதும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு மட்டுமே கடிதங்கள் அனுப்பி கோரிக்கை சாசனம் சமர்பிக்க கேட்டுக்கொண்டதையும், மீண்டும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அலுவலர் குழுவிடம் முறையிட்ட பிறகு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு கடிதம் அனுப்பப்பட்ட விபரங்களையும் விரிவாக எடுத்துக்கூறியும், சென்ற ஊதிய மாற்றத்தில் முரண்பாடுகள் உள்ளதை அரசே ஒப்புக்கொண்டு அரசாணைகள் வெளியிட்டதை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டிய பிறகு அமைச்சர்கள் நமது முதல் கோரிக்கையான அலுவலர் குழு சங்கங்களை அழைத்துப்பேசி கருத்தொற்றுமையின் அடிப்படையில் முரண்பாடுகளற்ற ஊதிய மாற்றம் ஏற்படுத்துவதற்கான உறுதிமொழியை வழங்கினர். நிதித்துறைச் செயலாளரும் நம்மை அழைத்துப்பேசி ஊதிய மாற்றம் செய்யப்படும் என்பதை ஏற்றுக்கொண்டார்.

மேலும் அமைச்சர்கள் 2017 ஜூலை இறுதிக்குள் ஊதிய மாற்றம் செய்யப்படும் என்றும் அப்படி செய்யப்படாவிட்டால் இடைக்கால நிவாரணம் பற்றி முடிவெடுக்கப்படும் என்றும் உறுதி அளித்தனர். ஆக அலுவலர் குழு அரசுக்கு பரிந்துரை அளிப்பதில் காலநீட்டிப்பு இருக்காது என்ற உத்திரவாதமும் இதன்மூலமாக உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் ''அதிமுக அரசு அமைத்தால் புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்படும்'' என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்ததையும், அதிமுக அரசமைத்தும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில் நாம் 2016ல் 10 நாள் வேலை நிறுத்தம் மேற்கொண்டதையும், 19.02.2016ஆம் தேதி ஜெயலலிதா அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் தமிழக சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் அறிக்கை வெளியிட்டு திருமதி சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைத்து அது மூன்று மாத காலத்திற்குள் அறிக்கை அளிக்கும் படி உத்தரவிட்டதையும், அந்த வல்லுநர் குழுவின் காலவரையானது இதுவரை நான்குமுறை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதையும் இது குறித்து இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எந்தவித அறிவிப்போ உத்தரவாதமோ வழங்கப்படவில்லை என்பதையும், இந்த பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் இதுவரை சுமார் ஐந்து லட்சத்திற்கும் மேலான அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தில் 10 சதவித தொகையை கடந்த 14 ஆண்டுகளில் (1.4.2003 முதல் 31.3.2016 வரை) ரூ.13,690/- கோடி பிடித்தம் செய்யப்பட்டுள்ளதையும், தமிழக அரசு இன்றுவரை ''ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி ஆணையத்துட''னான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்பதையும், இதற்கான மசோதாவை சட்டமாக்க நாடாளுமன்றத்தில் 2013ம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மசோதாவிற்கு எதிராக வாக்களித்ததை சுட்டிக்காட்டியும், கம்யூனிஸ்ட் ஆட்சி

கடைபிடித்த கொள்கையை அப்படியே ஏற்றுக்கொண்டு மேற்கு வங்க முதல்வர் செயல்பட்டு வருவதையும், திரிபுரா மாநில அரசும் கம்யூனிச கொள்கையின் அடிப்படையில் அதன் ஊழியர்களுக்கு பழைய பென்சன் திட்டத்தை செயல்படுத்தி வருவதையும் சுட்டிக்காட்டி அதுபோல் தமிழக அரசும் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து விட்டு அதற்காக ஊழியர்கள் செலுத்தியுள்ள நிதியை தமிழக மக்கள் நல திட்டங்களுக்காக செலவிடலாம் என்றும், பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்வதன் மூலம் அரசுக்கு நிதிச்சுமை எதுவும் ஏற்படாது எனவும் தெரிவித்தது அமைச்சர்களுக்கு புதிய தெளிவு ஏற்பட வைத்தது. நிதியமைச்சர் உடனே நிதித்துறை செயலாளரிடம் நிதிச்சுமை இல்லாவிட்டால் அதை உடனே செய்ய வேண்டியதில் என்ன சிக்கல் என்றும் இதன் மூலம் பங்களிப்பு ஓய்வூதிய நிதியை மக்கள் நல திட்டங்களுக்கு பயன்படுத்தலாம் என்றால் அது குறித்து ஏன் ஆவன செய்யக்கூடாது என்றும் கேட்க, நிதித்துறை செயலாளர் இது குறித்து விரிவாக பேச வேண்டியுள்ளதால் அதைப்பொறுத்து ஜூலை 2017க்குள் பேசி தீர்வுகாணலாம் என மழுப்பலான பதிலே தெரிவித்தார். நம்முடைய விளக்கத்தைக் கேட்டுக்கொண்ட நிதியமைச்சர் நிச்சயமாக இதுகுறித்து பரிசீலித்து முடிவெடுப்பதாக உறுதியளித்துள்ளார். நமது விளக்கமும், அதன்மீது அமைச்சரின் ஈர்ப்பும், பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை அதிகப்படுத்தியுள்ளது.

ஜெயலலிதா அவர்கள் சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்புகாலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்ததையும் 19-02-2016 ஆம் தேதி தமிழக சட்டப் பேரவையில் சட்டப்பேரவை விதி எண்.110-ன் கீழ் ஒரு அறிக்கை வெளியிட்டு அதில், ஊதிய விகிதங்களை மாற்றியமைத்தல், தொகுப்பூதியத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களை, காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டு வருதல், சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல் போன்றவை குறித்து எதிர்வரும் ஊதியக்குழு மூலம் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்திருந்ததையும் ஆனால் தற்போது ஊதியக்குழு அமைக்கப்படாமல் அலுவலர் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான பரிந்துரைகளை ஊதிய மாற்றத்துக்கான அலுவலர் குழுவே அளிக்க முதல்வர் அலுவலர் குழுவிற்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென வேண்டுகோள் விண்ணப்பம் கொடுத்திருந்ததை சுட்டிக்காட்டி, 30 ஆண்டுகளாக இக்கோரிக்கை நிலுவையில் உள்ளதையும், சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்கள் எவ்வித ஓய்வூதியப்பலனும் இன்றி பணிஓய்வு பெறுவதையும் விளக்கினோம். அமைச்சர்கள் அருகிலிருந்த நிதித்துறை செயலாளர் மூலம் அதை உறுதி செய்து கொண்டு அந்த கோரிக்கையும் அலுவலர் குழுவே பரிசீலித்து ஜூலை மாதத்திற்குள் அதன்பேரில் உரிய முடிவுகள் மேற்கொள்ளப் படும் என தெரிவித்தனர். நிதித்துறை செயலாளரும், இக்கோரிக்கை நீண்டகால கோரிக்கை என்பதால் கட்டாயம் அலுவல் குழுவே இதுகுறித்து பரிசீலித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படுவது குறித்து முடிவு செய்யப்படும் என தெரிவித்தார்.

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள சாலைப்பணியாளர்கள் தமிழக அரசால் பணி நீக்கம் செய்யப்பட்டு 41 மாதகால இடைவெளிக்குப் பின்னர் உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில் மீண்டும் பணியமர்த்தப்பட்டதையும் அவர்கள் 41 மாத பணிநீக்க காலம் பணிக்காலமாக கருதப்பட வேண்டும் என்றும் அவர்களின் பணி நீக்க காலத்தை பணி வரன்முறை செய்யவேண்டுமென்ற கோரிக்கையையும் நிச்சயம் பரிசீலித்து ஜூலை 2017க்குள் வரைமுறை படுத்துவது குறித்து பரிசீலித்து அறிவிப்பதாக தெரிவித்துள்ளனர்.

சமகாலத்து அரசியல் சூழ்நிலை, நாட்டில் நிலவும் வறட்சி, விவசாயிகள், மருத்துவர்கள், ஹைட்ரோகார்பன் திட்டம் கைவிடுதல் போன்ற போராட்டங்களால் தமிழகத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில் அரசு ஊழியர் சங்கம் ஒரு காலவரையற்றப் போராட்டத்தை அறிவித்து, அந்த போராட்டத்தை மழுங்கடிக்கும் வேலைகளில் அரசாங்கத்தின் அடிவருடிகளாக ஆண்டாண்டு காலமாக இருந்து வரும், சுதந்திர போராட்ட காலத்திற்கு முன் முனைப்பான தலைவர்கள் பெற்றுக்கொடுத்த அங்கீகாரப் போர்வையில் செயல்பாடுகளற்றுக் கிடைக்கும் வெற்று வேட்டு லெட்டர்பேடு சங்கங்கள், அரசு ஊழியர்களின் நலன்களுக்கு எதிராக செயல்பட்டு, தாங்கள் போராட்டத்தில் கலந்து கொள்ள வில்லை என்றும் போராட்டம் இப்போதைக்கு தேவையில்லை என்றும் முண்டியடித்து அரசாங்கத்திடம் கடிதம் கொடுத்துவிட்டு மூலைகளில் முடங்கிக் கிடப்பதும், அரசு ஊழியர் சங்கம் போராடி உரிமை களை பெற்றுவிட்டால் அதை தாங்கள்தான் அரசாங்கத்தில் பேசி பெற்றதாக சொல்லித் திரிவதுமான

ஈனச் செயல்களில் ஈடுபட்டு வருவதும், அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டும், பொறுத்துக் கொண்டும் நாம் நம்முடைய முனைப்பான போராட்டங்களை நடத்திச் சென்றதன் விளைவாக 26.4.2017 அன்று இந்த அரசாங்கம் நம்முடைய வலிமையை உணர்ந்து நம்மை அழைத்துச் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதிலிருந்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அரசு ஊழியர்களின் நலன்களை உரிமைகளை பாதுகாக்கும், பெற்றுத்தரும், தீர்மானிக்கும் தனிப்பெரும் சக்தியாக அரசு ஊழியர்கள் மத்தியில் தன்னை நிலை நிறுத்தியுள்ளது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் அரசு ஊழியர்களின் உரிமைகள் நலன்களில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நிலைப்பாடுகள் முக்கியத்துவம் பெறும் நிலைமையும் உறுதி செய்யப்பட்டுள்ளதையும் நாம் பெருமிதத்தோடு ஊருக்கு பறைசாற்றுவோம்.

நடந்துள்ள பேச்சுவார்த்தைகளும், அமைச்சர் பெருமக்கள் கொடுத்துள்ள உறுதி மொழிகளும், இப்போதுள்ள அரசியல் நிச்சயமற்ற சூழ்நிலையில், நிச்சயம் நடந்துவிடுமா என்ற சந்தேகங்களும் நம்மில் சிலருடைய சிந்தனையில் தோன்றுவது இயல்பே. அதற்காக நாம் பேச்சுவார்த்தைக்கான பாதைகளை அடைத்து விட்டு போராடிக்கொண்டே இருக்க முடியாது என்ற இயல்பான யதார்த்தத்தை யும் உணர வேண்டும். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் ஜூலை மாதத்திற்குள் அமைச்சர்கள் கொடுத்திருக்கும் உறுதி மொழிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற நூறு சதவீதம் நம்பிக்கொண்டிருக்கவில்லை. ஆனால் அதே சமயம் இப்போதுள்ள நிலையிலிந்து ஓரளவேனும் முன்னேற்றம் நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை மட்டும் நிச்சயமாகியுள்ளது. இதே அமைச்சர்கள் உள்ள அரசாங்கம் ஜூலை மாதத்திற்கு பிறகும் இருக்குமானால் நம்முடைய உரிமைகளை அவர்கள் கொடுத்த உறுதிமொழிகளை இடித்துரைத்து பெற முடியும் என்ற 'எக்ஸ்ட்ரா ஊக்கம்' இப்போது ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாமல், வேறு அமைச்சர்கள், வேறு தலைமை, உறுதிமொழி மறுப்பு... என்றால் மீண்டும் நாம் நம் கொடிகளையும் பதாகைகளையும் தூக்கிப்பிடிக்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் புரிந்துள்ளோம். எனவே தோழர்களே வேலை நிறுத்தப்போராட்டம் ஜூலை வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை கவனத்தில் கொண்டு அதற்கொப்ப காரியமாற்றுவோம்.

இடைப்பட்ட காலத்தில் போராட்டக் கங்குகள் அணைந்து விடாமல் சுடுதணலுக்குள் நம்முடைய கோபங்களை சூடேற்றி வைப்போம்.

சுற்றி நடப்பவற்றை கூர்ந்து கவனித்துக் கொண்டே சற்றே இளைப்பாறுவோம், வெற்றிக்கான வியூகங்களை இன்னும் சிறப்பாக வகுத்துக் கொண்டே! ❖

---

## அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் பெருந்திரள் முறையீடு



*04.04.17 அன்று மாலை நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துதல், ஊதிய/ஓய்வூதிய திருத்த ஐவர் குழுவின் அறிக்கை பெற்று 1.1.2016 அமுல்படுத்துதல்,அது வரை 1.1.2016 முதல் ஊதியத்தில்/ஓய்வூதியத்தில் 20% இடைக்கால நிவாரணம் வழங்குதல் உள்ளிட்ட 13 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நாகை தெற்கு மாவட்ட அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் மாவட்டத் தலைவர் ஏ.நடராஜன் தலைமையில் "பெருந்திரள் முறையீடு" ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி விளக்கவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச்செயலாளர் ப.அந்துவன் சேரல் மற்றும் தோழமைச் சங்கத் தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினர். நாகை தொழிற் சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் நிறைவுரையாற்றினார். 100க்கும் மேற்பட்ட ஓய்வூதியர் பங்கேற்றனர்.* ❖

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் காலவரையற்ற வேலை நிறுத்த நிகழ்வுகள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஊழியர் சங்க போராட்டக்குழு சார்பில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்துசெய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், தமிழக அரசு அறிவித்துள்ள ஊதிய மாற்ற அலுவலர் குழு சங்கங்களை அழைத்துப் பேசி நேரடி பேச்சுவார்த்தை முலம் ஊதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும், இடைக்கால நிவாரணம் 20 சதவிகிதம் வழங்க வேண்டும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஓய்வூதியம், ஒப்பந்த நியமணம் உள்ளிட்ட அனைவருக்கும் ஊதியக்குழுவால் வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும், சாலைப் பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 25.04.17 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் துவங்கியது. அதன் ஒரு பகுதியாக...

## சென்னை

சென்னை மாவட்ட போராட்டக் குழு சார்பாக ஏப்ரல் 25 அன்று சேப்பாக்கம் வளாகத்தில் தலைவர் சா.டேனியல் ஜெய்சிங் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக ஊழியர் சங்க செயலாளர் சுமிச் சந்தர், ஆதி திராவிடர் நலத்துறை ஊழியர் சங்க பொதுச் செயலாளர் இராஜசேகரன், பிற்படுத்தப்பட்டோர் மிக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஊழியர் சங்கத் தலைவர் இளங்கோ, நகர்ப்புற நிலவரித் திட்ட ஊழியர் சங்கத் தலைவர் பாலாஜி, மாநகர சுகாதார செவிலியர் சங்க துணைத் தலைவர் திலகம், நகராட்சி நிருவாக ஆணையரக அனைத்து ஊழியர் சங்க மாநிலத் தலைவர் சி.இரகுராமன் உள்ளிட்ட துறைவாரி சங்க தலைவர்கள் உரை யாற்றினர். அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். மாவட்ட நிர்வாகிகள் புகழேந்தி, வெங்கடேசன், வாசுகி, சுதா மற்றும் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் இதில் கலந்து கொண்டனர். வளாகத்தில் உள்ள நகராட்சி நிர்வாக ஆணையகரம், மறுவாழ்வுத் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதி திராவிடர் நலத்துறை, நகர்ப்புற நிலவரித் துறை, வருவாய் நிருவாக ஆணையரகம், நில நிருவாகத் துறை, நில அளவைத் துறை மற்றும் பதிவேடுகள் துறை உள்ளிட்ட தலைமை அலுவலகங்களில் 100% ஊழியர்கள் அலுவலகத்தை புறக்கணித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இரண்டாம் நாளான ஏப்ரல் 26 அன்று சேப்பாக்கம் வட்டக் கிளையில் பகுதி தலைவர் சுந்தர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர் சி.இரகுராமன் சிறப்புரையாற்றினார். இரண்டாம் நாள் வேலை நிறுத்தமும் மேற்படி துறைகளில் முழுமையாக நடைபெற்றது.

## திருவள்ளூர்

முதல் நாள் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அரசு ஊழியர் சங்க திருவள்ளூர் மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன் தலைமை தாங்கினார். இதில் மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல், பொருளாளர் எஸ்.காந்திமதிநாதன் உட்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாளான ஏப்ரல் 26 அன்று திருவள்ளூர் வட்டாச்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருவள்ளூர் வட்டாட்சியார் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பள்ளிப்பட்டு முதல் பொன்னேரி வரை உள்ள அனைத்து வட்டங்களிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். திருவள்ளூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அரசு ஊழியர் சங்கத்தின் வட்ட தலைவர் தாமோதரன் தலைமை தாங்கினார். இதற்கு மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன், மாவட்ட செயலாளர் ஜே.வி.அருள்டேனிவேல், பொருளாளர் எஸ்.காந்திமதிநாதன், துணை நிர்வாகிகள் மெல்கி ராஜாசிங், மணிகண்டன், திவ்யா, சந்திரசேகரன், சத்தியநாதன், லட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாகை

2ஆம் நாளான ஏப்ரல் 26 அன்று நடைபெற்ற போராட்டத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றனர். அன்று நாகை மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகை வட்டாட்சியரகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட துணைத் தலைவர் எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார். வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் விளக்கவுரை யாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் பா.ராணி, ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எம்.காந்தி, நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார், முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க நாகை கிளைச் செயலாளர் எஸ்.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வட்டத் தலைவர் சி.பாலசுப்பிர மணியன் நன்றி கூறினார்.

குத்தாலத்தில் சாமி.மனோகரன், மயிலாடு துறையில் ராஜரெத்தினம், சீர்காழியில் எல்.பிரேம் சந்திரன், சம்பனார்கோயிலில் டி.தட்சிணாமூர்த்தி, வேதாரண்யத்தில் கே.தமிழ்வாணன், கீழ்வேளூரில் என்.புகழேந்தி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## தருமபுரி

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. தருமபுரியில் வட்டத் தலைவர் மாணிக்கம் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்செல்வி, மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் மணிவண்ணன், மாவட்டச் செயலாளர் ச.இளங்குமரன், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் சி.எம்.நெடுஞ்செழியன், வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் வெங்கடேசன், கிராம சுகாதார சங்க மாவட்ட செயலாளர் ராஜேஷ்வரி, ஓய்வூதியர் கூட்டமைப்பு செயலாளர் சொளந்தரம் ஆகியோர் பேசினர்.

அரூரில் வட்டத் தலைவர் சுவாமிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் பி.எஸ்.இளவேனில், வட்டச் செயலாளர் அழகிரி, காரிமங்கலத்தில் நிர்வாகிகள் சி.நாகராஜன், ஜோஸ், பாலக்கோட்டில் மாவட்ட இணைச் செயலாளர் முனிராஜ், வட்டத் தலைவர் குணசேகரன், நல்லம்பள்ளியில் மாவட்ட துணைத் தலைவர் எம்.சிவப்பிரகாசம், பென்னாகரத்தில் மாவட்ட இணைச் செயலாளர் சி.காவிரி, வட்டத் தலைவர் லட்சுமி, பாப்பிரெட்டிபட்டியில் வட்டத் தலைவர் சண்முகம் ஆகியோர் பேசினர்.

தருமபுரி மாவட்டம் முழுவதும் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. தருமபுரியில் வட்டதலைவர் மாணிக்கம் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி சத்துணவு ஊழியர் சங்க மாவட்டசெயலாளர் சி.எம்.நெடுஞ்செழியன், ஓய்வூதியர் கூட்டமைப்பு தலைவர் பழனிச்சாமி ஆகியோர் பேசினர்.

## திருப்பூர்

திருச்செங்கோடு ஒன்றிய அலுவலகம் முன்பு வட்டக் கிளை சார்பில் வட்டத் தலைவர் க.சூரியகுமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோரிக்கைகளை விளக்கி வட்டச் செயலாளர் ஏ.பாலசுப்பிரமணியன் பேசினார். முன்னாள் அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் கே.எஸ்.இளங்கோவன் சிறப்புரையாற்றினார். ஐசிடிஎஸ் பாண்டிமாதேவி, சாலைப் பணியாளர்கள் சங்க மாவட்டச் செயலாளர் எம்.பழனிசாமி, மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.கதிர்வேல், வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் காரல் மார்க்ஸ், சத்துணவு ஊழியர் சங்கத்தின் தங்கராஜ், அங்கன்வாடி பணியாளர்கள் சங்கத்தின் மாவட்ட தலைவர் கண்ணகி ஆகியோர் வாழ்த்தி பேசினர். நிறைவாக வட்ட பொருளாளர் எம்.தனசேகரன் நன்றி கூறினார்.

## கரூர்

கரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு 25.4.2017 அன்று போராட்டக் குழு அமைப்பாளர் மு.மகாவிஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் விளக்கவுரையாற்றினார். மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன் சிறப்புரை யாற்றினார். இதில் 250 பெண்கள் உட்பட 650 பேர் கலந்து கொண்டனர். போராட்டத்தை வாழ்த்தி துறைவாரி சங்கங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினர்.

கரூர் மாவட்டத்தில் அனைத்து வட்டக் கிளைகளிலும் 26.4.2017 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கரூர் 1 வட்டக் கிளையில் வட்டச் செயலாளர் எல்.பாலசுப்பிரமணி, கரூர் 2 வட்டக் கிளையில் மாவட்ட பொருளாளர் ஆர்.செந்தில், மணிமங்கலத்தில் வட்டத் தலைவர் குப்புசாமி, அரவக்குறிச்சியில் வட்டத் தலைவர் தங்கபாண்டியன், குளித்தலையில் வட்டத் தலைவர் கே.பாண்டிக்கண்ணன், கடவூரில் வட்டத் தலைவர் பி.ஸ்ரீரங்கன், கிருஷ்ணராயபுரத்தில் ஆய்வக நுட்புனர் சங்க மாநிலச் செயலாளர் செல்வராணி ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்வேறு துறைவாரி சங்க நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தி பேசினர். இந்த ஆர்ப்பாட்டங்களில் 255 பெண் ஊழியர்கள் உட்பட 1105 பேர் கலந்து கொண்டனர். ❖

# விவசாயிகளுக்கு ஆதரவாக அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

விவசாய கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்ய வேண்டும். பயிர் இழப்பிற்கான காப்பீட்டுத் தொகையை உடனே வழங்க வேண்டும், விவசாய நிலங்களை பாதிக்கும் ஹைட்ரோ கார்பன் மற்றும் மீத்தேன் திட்டங்களை கைவிட வேண்டும், நதி நீர் பிரச்சனைகளுக்காக ஒற்றைத் தீர்பாயம் அமைக்கும் முயற்சியை கைவிட வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம், ஒழுங்காற்றுக்குழு ஆணையம் அமைக்க வேண்டும், விவசாயிகளையும், விளைநிலங்களையும் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் 19.04.2017 மாலை நேர ஆர்ப்பாட்டம் நடத்திட அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக...

## தென் சென்னை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் சென்னை எழிலகத்தில் பகுதி தலைவர் சுந்தர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பகுதி செயலாளர் மாரிமுத்து வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் கி.இரகுராமன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் கார்த்தி நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 50 பெண்கள் உட்பட 250 பேர் பங்கேற்றனர்.

## திருப்பூர்

திருச்செங்கோடு வட்டக்கிளையின் சார்பில் வட்டத் தலைவர் க.சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது. கோரிக்கைகளை விளக்கி வட்டச் செயலாளர் ஏ.பாலசுப்பிரமணியன் பேசினார். ஆலீ;ப்பாட்டத்தை வாழ்த்தி ஐசிடிஎஸ் பாண்டிமாதேவி, சாலைப் பணியாளர்கள் சங்க மாவட்ட பொருளாளர் வி.விவேகானந்தன், மாவட்ட இணைச்செயலாளர் எஸ்.கதிர்வேல், மாநில செயற்குழு உறுப்பினர் ரகுராம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். வணிகவரித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில தலைவர் ஜனார்ந்தனன் சிறப்புரையாற்றினார். வட்ட இணைச் செயலாளர் உமாராணி நன்றி கூறினார்.

## நீலகிரி

உதகை கிளையில் குமாரராஜா, பந்தலூர் கிளையில் வட்டச் செயலாளர், கூடலூர் வட்டக் கிளையில் வட்டத் தலைவர் சந்திரபோஸ், கோத்தகிரி வட்டக் கிளையில் செயலாளர் வாசு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் துறைவாரி சங்க நிர்வாகிகள் முத்துக்குமார், ஆனந்தன், பரமேஸ்வரி, ரமேஷ், ஜாகீர், பத்மநாபன், சந்திரபோஸ், ரவீந்திரன், ஜான்மனோகர், ஆஸரா ஆகியோர் பங்கேற்று வாழ்த்தி பேசினர். ❖

### வாசகர் கடிதம்

கடந்த ஏப்ரல் இதழில் வெளிவந்த கட்டுரைகள், கவிதைகள் அனைத்தும் மிக அருமை. கருத்துப்படம், நையாண்டி, கேலிச் சித்திரம் சமீப காலமாக இடம் பெறவில்லை. இதை இடம்பெறச் செய்தால் சிறப்பாக இருக்கும்.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

ஏப்ரல் 2017 இதழில் புதிய பகுதியாக விதையின் கதை அருமை. சரித்திரத்தின் தரித்திர சுழற்சி செய்யும் அரசின் சூழ்ச்சியை நமது போராட்ட வரலாற்று சுழற்சி செய்து முறியடிப்போம். இளநீர், கொட்டட்டும் முரசு! கூப்பிடட்டும் அரசு! கவிதைகள் நன்றாக இருந்தது, நமது கோரிக்கையை தலைப்பிட்டு விளக்கிய கட்டுரை, கோரிக்கை சாசனத்தின் சுருக்கம் - ஒரு முறைக்கு இருமுறை படித்து தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

- **சி. பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்.

# சிவகாசி காவல்துறை ஆய்வாளரின் அத்துமீறலை அடக்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நடவடிக்கைகள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சிவகாசி வட்டக் கிளைத் தலைவர் ஆர்.வைரவன் கடந்த 24.03.2017ம் தேதி இரவு சிவகாசி இரயில்வே கேட்டை தன்னுடைய இரு சக்கர வாகனத்தில் கடந்து சென்றபோது அங்கிருந்த சிவகாசி காவல் நிலைய சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் பாஸ்கரன் அவரை தடுத்து நிறுத்தி விதிகளை மீறி சாலையை கடந்து வந்ததாக கூறி அசிங்கமான வார்த்தைகளால் திட்டியுள்ளார். அதற்கு வைரவன், "நான் போக்கு வரத்து விதிகளை மீறி வாகனம் செலுத்தியதாக நினைத்தால் அபராதம் விதியுங்கள், அதை கட்டி விடுகிறேன். ஆனால் அதற்காக தரக்குறைவான வார்த்தைகளால் பேச வேண்டாம்'' என்றும், தான் ஒரு அரசு ஊழியர் என்றும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் சிவகாசி வட்டக் கிளை தலைவராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். வைரவனின் வார்த்தைகளால் கோபமடைந்த காவல் ஆய்வாளர் பாஸ்கரன், அவரது இருசக்கர வாகனத்தின் சாவியை எடுத்துக்கொண்டு அவரிடம் ஆய்வாளர் என்ன வேலை செய்கிறாய் என்று கேட்டு அதற்கு அவர் தான் ஒரு சாலைப் பணியாளர் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் சிவகாசியின் வட்டத் தலைவராக இருப்பதாகவும் தெரிவித்ததும், "ரோடில் மண்ணை அள்ளிப் போடும் வேலை பார்க்கும் உனக்கெல்லாம் என்ன மரியாதை வேண்டியிருக்கு'' என்று அசிங்கமாகப் பேசி, கன்னத்தில் அறைந்தும், கடுமையாக தாக்கியும் "தலைக் கவசம் அணியாமல் வண்டி ஓட்டியதற்காக உன் மீது வழக்கு போடுகிறேன்'' என்று மிரட்டியுள்ளார். மேலும் காவல் நிலையம் கொண்டு சென்று பிறகு இரவு 11.00 மணியளவில் அவரை காவல் நிலையத்தில் வைத்திருந்து வெள்ளைத் தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு பிறகு விடுவித்துள்ளார்.

மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக நமது சங்கத்தின் விருதுநகர் மாவட்ட நிர்வாகிகள் காவல் ஆய்வாளர் பாஸ்கரனிடம் நேரடியாக சென்று பேசியபோது ஆய்வாளர் அவர்களையும் தரக்குறைவான வார்த்தைகளால் பேசியும், அசிங்கமான வார்த்தைகளால் ஏசியும் உள்ளார். அதனால் காவல் ஆய்வாளர் பாஸ்கரனின் அராஜகப் போக்கை கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் மாநிலத் துணைத்



தலைவர் ந.குமாரவேல், விருதுநகர் மாவட்டத் தலைவர் முத்துராஜ் விருதுநகர் மாவட்டச் செயலாளர் கண்ணன், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்டச் செயலாளர் வைரமுத்து, இந்திய தொழிற் சங்க மையத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார், விருதுநகர் மாவட்ட உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் மகாலட்சுமி, தமிழ்நாடு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் குருசாமி மற்றும் இதர தோழமைச் சங்க நிர்வாகி களும், பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் சேர்ந்து 5.4.2017ம் தேதி ஒரு கண்டன ஆர்ப்பாட் டத்தை சிவகாசி கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு காவல் ஆய்வாளர் பாஸ்கரனுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜனநாயக முறையில் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் சட்டவிரோதமானது என்றும் உரிய அனுமதி இல்லாமல் நடந்ததாகவும் சித்தரித்து மேற்கண்ட தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மீது இ.த.ச. 143 மற்றும் 188 பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேலும் ஆய்வாளர் பாஸ்கரனைக் கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கண்டன போஸ்டரை ஒட்டிய ஊழியரையும் தாக்கியுள்ளார்.

சிவகாசி நகர் காவல் நிலைய சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் பாஸ்கரன் அவர்களின் இந்த செயலானது அராஜகமானதும், அத்துமீறியதுமான தாகும். அரசு ஊழியர்களை அவதூறாகப் பேசு வதும், கிரிமினல் குற்றவாளிகளைப் போல் நிற்க வைத்து காவல் நிலையத்தில் விசாரணை செய் வதும் அடிப்படை விதி மீறில்களின் உச்சகட்ட மாகும். போராட்டம் செய்வதும், ஆர்ப்பாட்டம் நடத்துவதும் ஜனநாயக நாட்டில் அனுமதிக்கப் பட்ட ஒன்றாகும். அதற்காக பிணையில் விடக் கூடாத குற்றப் பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது அரசு ஊழியர்களை மிரட்டிப் பார்க்கும் செயலாகும். காவல் துறை ஆய்வாளர் பாஸ்கரனின் செய்கைகள் அவர் உண்மையில் தெளிந்த சிந்தனையுடன்தான் இருக்கிறாரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அதனால் அவரை உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்து அவர் மீது துறைவாரி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக முதல்வர், உள்துறைச் செயலாளர் மற்றும் தமிழக காவல் துறை தலைவர் ஆகியோருக்கு புகார் கொடுத்து காவல்துறை தலைவர் அவர்களை நேரில் சந்தித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் களையும், நிர்வாகிகளையும், சங்கத்தையும் அவதூறாகவும் தவறாகவும் பேசிய காவல் ஆய்வாளர் பாஸ்கரன் அவர்களை உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்து அவர் மீது துறைவாரி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினோம். நமது புகார் நியாய மானது என்றால் கண்டிப்பாக காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை எடுப்பதாக காவல்துறைச் தலைவர் உறுதியளித்ததோடு உடனடியாக விருதுநகர் காவல்துறை கண்காணிப்பாளரைத் தொடர்பு கொண்டு இந்நிகழ்வு குறித்து விசாரித்த முடிவெடுக்கவும் தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

விருதுநகர் காவல்துறை கண்காணிப்பாளர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க விருதுநகர் மாவட்ட நிர்வாகிகளை உடனடியாக நேரில் அழைத்துப் பேசி காவல் ஆய்வாளரின் பேரில் நடவடிக்கை எடுப்பதாகவும், நிர்வாகிகள் மீது போடப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் நடவடிக்கையை கைவிட உத்தரவிடுவதாகவும் உத்திரவாதம் அளித்ததன் பேரில் நாம் 13.4.2017ம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் மேற்கொள்ள விருந்த காவல்துறை அய்வாளர் பாஸ்கரனுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டத்தை விலக்கிக் கொண்டோம். காவல்துறை ஆய்வாளர் ஒருவரின் சட்டத்திற்கெதிரான அத்துமீறலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சவாலாக ஏற்று சாதனை படைத்துள்ளதை தோழர்கள் அனைவரும் அறிந்து கொள்வதோடு சட்டம் மற்றும் ஜனநாயக நடைமுறைகளுக்கு எதிராக நமது போராட்டங் களுக்கும் சுயமரியாதைக்கும் இழுக்கு ஏற்படுத் தும் வகையில் யார் செயல்பட்டாலும் அதை தட்டிக்கேட்டு தவறுகளை சரி செய்ய வேண்டும் என்பதையும் மனதில் கொள்வோம்.

**- மு.அ.**

## வாழ்த்துக்கள்

*தமிழ்நாடு பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு சேலத்தில் நடைபெற்றது. இதில் காலியாக இருந்த மாநி நிர்வாக பணியிடங்களுக்கு கீழ்க்கண்டவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மாநில பொதுச் செயலாளராக சி.பி.ஜெயராமன், மாநில பொருளாளராக ஆர்.நடராஜன், மாநில துணைத் தலைவராக ஜி.கருணாநிதி, மாநிலச் செயலாளராக ஏ.ராஜ்பாபு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.*

# அவசரமான நிலையில் ஒரு அரசு ஊழியர் அரசாணையில் கண்டுள்ள மருத்துவமனையில் தான் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதில்லை

## உயர் நீதிமன்றம் உத்தரவு!!!


ஓர் அரசு ஊழியர், அரசின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பட்டியலில் குறிப்பிட்டுள்ள மருத்துவமனை அல்லாத ஒரு மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டால், அதற்கான மருத்துவ செலவை காப்பீடு நிறுவனம் வழங்க மறுக்க முடியாது. நிதித் (ஊதியம்) துறையின் சார்பில் ஒரு புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் குறித்து 2012ஆம் ஆண்டில் G.O.Ms.No.243 என்கிற எண்ணில் ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. அந்த அரசாணையின் படி அரசு துறையில் பணிபுரிந்து வருபவர்களுக்கு ரூபாய் 4,00,000/- வரை மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. அந்த திட்டத்தை நிறைவேற்ற சென்னையில் உள்ள யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி நியமிக்கப்பட்டது. மேற்படி அரசாணையில் எந்தெந்த நோய்களுக்கு, எந்த விதமான சிகிச்சைகளுக்கு எந்த மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறலாம் என்ற விபரங்கள் கூறப்பட்டுள்ளது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் பெயர்களும் வெளியிடப் பட்டுள்ளது. எனவே அரசு ஊழியர்கள் மேற் கண்ட பட்டியலில் கண்ட மருத்துவமனைகளில் தான் சிகிச்சை பெற வேண்டும். அப்படி அல்லாமல் வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றால் மருத்துவ காப்பீட்டு திட்டப்படி மருத்துவ செலவு தொகையை வழங்க முடியாது என காப்பீடு நிறுவனம் கூறுவதை ஏற்க முடியாது. ஆனால் இந்த சங்கதியை சென்னை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரு அரசு ஊழியருக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு உயிருக்கு போராடி கொண் டிருக்கும் நிலையில், அவருடைய உறவினர்கள் காப்பீடு நிறுவனம் குறிப்பிட்டுள்ள மருத்துவ மனையை தேடி அலைந்து கொண்டிருக்க முடியாது. ஓர் அவசரமான நிலையில் ஒரு அரசு ஊழியர், அரசாணையில் கண்டுள்ள மருத்துவ மனையில் தான் சிகிச்சை பெற்றிருக்க வேண்டும் என்று கூறுவதை ஏற்க முடியாது. ஒரு அரசு ஊழியர் அவருக்கு சிகிச்சை செய்த பொழுதோ அல்லது அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்ட போதோ அவருக்கு ஏற்படும் மன வேதனை குறித்து பல வழக்குகளில் உயர்நீதிமன்றம் விவாதித்துள்ளது. ஏற்கனவே K.Srinivasan Vs State of Tamilnadu and Others (W.P.NO.13594 & 29192/2013 என்ற வழக்கில் மனுதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ தொகையை அரசு வட்டியுடன் செலுத்த வேண்டும் என 4.9.2014ம் தேதியில் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு மருத்துவ விதிகளில் (Tamilnadu Medical Attendance Rules) சார்ந்திருப்பவர்களுக்கு மருத்துவ சலுகை அளிப்பது குறித்து குறிப்பிடப் பட்டுள்ளது. அந்த விதிகளின்படி அரசு ஊழியர் மருத்துவ செலவை ஈடு செய்யும் படி அரசாங்கத் திடம் கோரலாம் என Star Health And Alaid Insurance company Ltd Vs Sokkan And Others (2010-2-LW-90) என்ற வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளது. தமிழ்நாடு மருத்துவ விதிகளில் யார் யாரெல்லாம் அந்த விதிகளின்படி மருத்துவ சலுகை பெறலாம் என கூறப்பட்டுள்ளது. அதில் யார் நல்ல வசதியான நபர் என்பதற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெறா விட்டால் மருத்துவ சலுகை பெற முடியாது என்பது உண்மை தான் என்றாலும் காப்பீட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாலும் அரசு ஊழியருக்கு மருத்துவ செலவை அரசு கொடுக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளது.

- பழனிசாமி

### பணி நிறைவு வாழ்த்துக்கள்



**அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத் தலைவர் பா.ரவி அவர்கள் 30.04.2017 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு காலத்திலும் அவருடைய சமூகப் பணி தொடர தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர் சங்கம்

வருவாய் கிராம உதவியாளர்களுக்கு ஊதியக் குழுவில் வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும், சதவிகித அடிப்படையில் பொங்கல் போனஸ் வழங்க வேண்டும், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், இடைக்கால நிவாரணம் 20 சதம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை



களை வலியுறுத்தி நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் தமிழக முதலமைச்சரின் கவனத்தை ஈர்க்கும் பேரணி மாவட்டத் தலைவர் பி.பன்னீர்செல்வம் தலைமையில் 10.04.17 அன்று மாலை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டிடம் முதல் கோட்டாட்சியர் அலுவலகம் வரை நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் எம்.அண்ணாதுரை வரவேற்றார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் பேரணியை துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் டி.பால்ராஜ் விளக்கவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி, ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்க மாவட்டச் செயலாளர் வி.பால சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலச் செயலாளர் கே.சுகுமார் நிறைவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.மோகன், பி.நாத்திகன் மற்றும் தோழமைச் சங்கத்தினர் உட்பட 100 க்கு மேற்பட்டோர் பேரணியில் பங்கேற்றனர். மாவட்டப் பொருளாளர் வி.ஜெயச்சந்திரன் நன்றி கூறினார்.

## தமிழ்நாடு புதுவாழ்வு திட்ட ஊழியர் கூட்டமைப்பு

இக்கூட்டமைப்பின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 1500 பேர் கடந்த 11 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகின்றனர். திருவள்ளூர் மாவட்டத்தில் 5 ஒன்றியங்களில் 58 பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த ஊழியர்கள் கிராம்புறங்களில் நிலவும் வறுமையை போக்குவதற்காக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி, கடன் உதவி, சேமிப்பு, பெண்கள் முன்னேற்றம் அடைய சுய தொழில் செய்யவும் அந்த பொருட்களை சந்தைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு வழி காட்டுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் பணிக்காலம் வரும் ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது. இந்த நிலையில் தமிழ்நாடு புதுவாழ்வு திட்டத்தின் திருவள்ளூர் மாவட்ட அளவிலான ஊழியர்களின் கூட்டம் மார்ச் 31 அன்று திருவள்ளூரில் மாவட்ட தலைவர் எஸ். சாயாதேவி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ஏ.நாகராஜ், பொருளாளர் ஆர். நக்கீரன் உட்பட அனைவரும் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு புதுவாழ்வு திட்ட ஊழியர் கூட்டமைப்பின் சார்பில் ஏப்ரல் 26 அன்று திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதற்கு சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஏ,நாகராஜ் தலைமை தாங்கினார்.தமிழ்நாடு புதுவாழ்வு திட்ட பணியாளர் நலச்சங்க மாநில தலைவர் ஆர்.தமிழ்அரசு,மாநில செயற்குழு



உறுப்பினர் டி.சீனிவாசன்,புதுவாழ்வு திட்ட அலுவலர் நலச்சங்க மாநில செயற்குழு உறுப்பினர் ஆர்.சுபான்,தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன், மாவட்ட செயலாளர் ஜெ.வி.அருள்டேனியேல், புதுவாழ்வு திட்டத்தின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் பேசினர்.

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கம்

சாலை பராமரிப்பு பணியை தனியாருக்கு வழங்கக்கூடாது, 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், சாலைப் பணியாளர்களுக்கு கருவூலம் மூலம் ஊதியம் வழங்க வேண்டும், விதிகளை தளர்த்து கருணையடிப்படையிலான நியமனத்தை காத்திருப்போர் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நாகை மாவட்ட மையம் சார்பில் 07.04.17 மாலை சங்கு ஊதி சாவு



மணியடித்து ஆர்ப்பாட்டம் மாவட்டத் தலைவர் எம்.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. நாகை வட்டத் தலைவர் கே.தமிழ்செல்வம் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் எஸ்.கணேசன் விளக்கவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் எம்.பாலமுரளி, அரசு ஊழியர் சங்க நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் சிறப்புரையாற்றினார். சாலைப் பணியாளர் சங்க மாநிலச் செயலாளர் வி.கணேசன் நிறைவுரையாற்றினார். நாகை வட்டப் பொருளாளர் எஸ்.ரஞ்சித்குமார் நன்றி கூறினார். ❖

**இரத்த தானம் செய்வோம்!**
**உயிர்களைக் காப்போம்**

## பணி நிறைவுப் பாராட்டு விழா

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாவட்டச் செயற்குழு உறுப்பினரும், நகராட்சி ஊழியர் சங்கத்தின் மண்டலச் செயலாளருமான என்.பாபுராஜூவின் பணி நிறைவுப் பாராட்டு விழா அரசு ஊழியர் சங்கம் சார்பில், நாகை அரசு ஊழியர் சங்கக் கூட்ட அரங்கில் 1.4.2017 அன்று நடைபெற்றது.





விழாவிற்கு அரசு ஊழியர் சங்க நாகைக் கிளைத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் வரவேற்றார். சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நாகைமாலி, வாழ்த்திப் பேசினார்.

அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன், நகராட்சி நிர்வாக ஆணையரக அனைத்து ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கி.ரகுராமன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நாகை நகராட்சி ஆணையர் பா.ஜான்சன் சால்வை அணிவித்து வாழ்த்தினார்.

அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.டி.அன்பழகன், மாவட்டத் தலைவர் ப.அந்துவன்சேரல், மாவட்டப் பொருளாளர் பா.இராணி, தோழமைச் சங்க நிர்வாகிகள் கே.இராஜூ, எஸ்.இராஜேந்திரன், சு.சிவகுமார், ந.காவியன், சொ.கிருஷ்ணமூர்த்தி, வி.பாலசுப்பிரமணியன், எஸ்.மணி, ப.ஜீவானந்தம், சி.வாசு, பி.நாகராஜன், உள்ளிட்ட பலர் வாழ்த்திப் பேசினர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் மு.அன்பரசு, பாபுராஜூவிற்கு நினைவுப் பரிசுகளை வழங்கி வாழ்த்தி நிறைவுரையாற்றினார். என்.பாபுராஜ் ஏற்புரையாற்ற, சங்கத்தின் வட்டப் பொருளாளர் வி.மாரிமுத்து நன்றி கூறினார்.

# விவசாயிகள் நிர்வாணம் ஒரு தேசிய அவமானம்!

**மானம் காக்க**
**மீதமிருந்தது**
**அது ஒன்றுதான்**
**இன்று அதுவும்**
**அவிழ்க்கப்பட்டது!**

கடந்த ஒரு மாத காலமாக டெல்லிலியல் தமிழக விவசாயிகள் பல கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். ஊடகங்களில், வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டும், மத்திய மாநில அரசுகளிடமிருந்து பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் போன்ற முக்கிய கோரிக்கைகளுக்காக விவசாயிகள் போராடுவதாக செய்திகள் பரப்பப்படுகின்றன. ஆனால், சற்று உற்றுப் பார்த்தால் இந்த காரணங்களுக்காக மட்டுமே விவசாயிகள் தமிழகத்தை விட்டுவிட்டு டெல்லியில் கடும் குளிரிலும், சுடும் வெயிலிலும் இத்தனை நாட்களாக போராட வேண்டிய அவசியம் இல்லை என்பது விளங்கும். நாளுக்குநாள் நலிந்து கொண்டிருக்கும் விவசாயத் தொழிலை எப்படியாவது நல்ல நிலைக்கு கொண்டு வந்துவிட முடியுமா? அரசாங்கத்தை ஒரு பெரிய கொள்கை மாற்றத்திற்கு திருப்பி விட முடியாதா? என்கிற ஆழ்ந்த கவலையின் வெளிப்பாடே இந்த உக்கிரமான தொடர் போராட்டத்திற்கு காரணமாக இருக்க முடியும் என்பதை மெல்ல மெல்ல அனைவரும் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

டெல்லி ஜந்தர்மந்தரில் இருந்துதான் தமிழக விவசாயிகள் போராட்டத்தைத் துவக்கினர். அரசின் கவனத்தை தம் பக்கம் ஈர்ப்பதற்காக அவர்கள் பலவிதமான போராட்டங்களை நடத்தினர். சட்டையணியாமல் போராட்டம், அரை மொட்டையடித்து போராட்டம், சிரசாசன போராட்டம், தியானப் போராட்டம், எலி திண்ணும் போராட்டம், பாம்பு கறி திண்ணும் போராட்டம் இப்படி பலப்பல போராட்டங்களை அவர்கள் நடத்தினர். மெல்ல மெல்ல அரசியல்வாதிகள், நடிகர்கள் என பிரபலங்கள் பலரும் அவர்களுடைய போராட்டத்தை நேரில் சென்று ஆதரிக்க, தமிழகம் மட்டுமின்றி இந்திய ஊடகங்கள் பலவும் அவர்கள் பக்கம் திரும்பினர். யார் திரும்பி என்ன, பிரதமரும், விவசாய மந்திரியும் மட்டும் இது இந்தியாவின் பிரச்சனை அல்ல என்பதைப்போல அதைப் பொருட்படுத்தாமல் அவர்களை அழைத்துப் பேசுவதை அவமானகரமான செயலாக கருதிக்கொண்டு பசுவதைச் சட்டத்தை இந்தியா முழுவதும் எப்படி நிறைவேற்றுவது என்பதில் தீவிரம் காட்டி வருவதை நாடே அறுவெறுப்புடன் பார்த்து வருகிறது. ஆட்சியாளர்களின் இந்த செயல் இன்றைய அரசாங்கத்தின் விவசாயிகளைப் பற்றி யோசிக்க யாரும் இல்லை என்ற யதார்த்தத்தை வெளிக்கொணர்ந்துள்ளது.

“நாட்டினுடைய பொருளாதாரத்தை நாம் முன்னேற்ற விரும்பினால் விவசாயத்திற்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்” என்று மோடி ஒரு நிகழ்ச்சியில் பேசியதை மக்கள் இப்போது புரிந்து கொண்டிருக்கிறார்கள். பிரதமர் மோடி எதற்கு முன்னுரிமை கொடுத்து வருகிறார் என்று அவர் கொடுக்கும் முன்னுரிமை எல்லாம் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல்லாயிரக்கணக்கான கோடிகள் கடன் வழங்குவதும், பெரிய தொழிலதிபர்கள் ஏற்கனவே பெற்ற கடன்களை தள்ளுபடி செய்வதுமேயாகும். சமீபத்தில் நெடுஞ்சாலையோரம் உள்ள மதுக்கடைகளை மூட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டவுடன் மது வியாபாரிகள் அழுத்தத்தையடுத்து அடுத்த சில மணி நேரங்களிலேயே இந்த உத்தரவை எப்படி எதிர்கொள்ளலாம் என்று கூடி முடிவெடுத்த மோடி, முப்பது நாட்களாக போராடி வரும் தமிழக விவசாயிகளை இதுநாள்வரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்பது வெட்கக்கேடான விஷயம்.

பொதுவாகவே அரசாங்கங்கள், இதுபோன்ற போராட்டங்கள் வலுவடையும்போது போராட்டத்தின் முனையை உடைக்கும் வேலைகளை வெவ்வேறு தளங்களில் இருந்து மேற்கொள்ளும். ஒன்று ஒட்டுமொத்த போராட்டத்தையே திசை திருப்பப் பார்க்கும் அல்லது போராட்டத்தை தலைமை தாங்குபவரை தனிப்பட்ட முறையில் அசிங்கப்படுத்தி போராட்டக்காரர்களுக்குள்ளேயே பேதத்தையும் பிரிவினையையும் வளர்க்கும். விவசாயிகள் போராட்டம் ஜந்தர்மந்தரில் நடக்கும் பல போராட்டங்களைப் போன்ற ஒன்றுதான் என்று பாஜக அதை முதலில் அலட்சியப்படுத்தியது. ஆனால், போராடும் விவசாயிகளின் விதவிதமான யுக்திகளால் ஊடகங்களின் ஒவ்வொரு திரையிலும், அரசியலின் ஒவ்வொரு தளத்திலும் அது விரிந்து படர்ந்து விவாதப் பொருளானபோது மோடி அரசு விழித்துக் கொண்டு மக்கள் மத்தியில் விவசாயிகளை கொச்சைப்படுத்தும் முயற்சியில் இறங்கியது.

“விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் அது அவர்கள் ஒழுங்கீனமாக

நடந்துகொள்ள வழிவகுக்கும். வரி கொடுத்த மக்களின் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாகும். பொருளாதாரச் சிக்கல்களை உருவாக்கும்" என்று ஒரு புறம் ரிசர்வ் வங்கியின் கவர்னர் உர்ஜித் படேல் மூலம் உரை நிகழ்த்த வைத்துவிட்டு மறுபுறத்தில் போராட்டத்தை தலைமை ஏற்று நடத்தும் தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாகண்ணு மீது தனது தேசியத் தலைவர் எச்.ராஜா மூலம் "அய்யாகண்ணு ஆடி கார் வைத்திருக்கிறார். அவர் மணல் அள்ளுவோருக்கு வக்காலத்து வாங்கினார். அவர் ஒரு ஏமாற்றுப் பேர்வழி" என்றெல்லாம் சகட்டுமேனிக்கு மலத்தை வாரி விசியிருக்கிறது அது. ரூ. 6 லட்சம் கோடி வங்கிக் கடன்களை வராக் கடன் என்று இந்த அரசு அறிவித்தது. இதில் பெரும்பாலான கடன்கள் பெருமுதலாளிகள் வாங்கியவை. அப்போது ரிசர்வ் வங்கி கவர்னர் அதைப்பற்றி வாய் திறக்கவில்லை. அப்படி தள்ளுபடி செய்யப்பட்ட வராக்கடன்களில் ஒரு பைசா கூட மக்களின் வரிப்பணம் இல்லை என்று சொல்ல முடியுமா ரிசர்வ் வங்கி கவர்னரால்?

ஆக விவசாயி என்றால் எப்போதும் பரதேசியாகவே பார்க்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இன்னும் அதிகாரிகளையும் ஆட்சியாளர்களையும் விட்டு அகலவில்லை. நாம் ஒவ்வொரு வேளையும் உண்ணுகின்ற உணவுக்குக் காரணமான விவசாயிகளுக்காக இந்தியாவின் தலைநகரில் நடத்தப்படும் போராட்டங்களை கையில் மண்டை ஓடுகளை ஏந்திக்கொண்டு வாயில் எலிகளை கவ்விக்கொண்டு, கழுத்தில் தூக்குக்கயிறை மாட்டிக்கொண்டு, கோவணத்தைக் கட்டிக்கொண்டு போராடியும் ஒரு அரசாங்கம் திரும்பிப் பார்க்காமல் இருந்தால் விவசாயி வேறு என்னதான் செய்ய முடியும், நிர்வாணப்பட்டு நிற்பதைத்தவிர. அதையும் செய்து முடித்த பின்னும் அவர்களை அழைத்துப் பேச முன்வராத அரசாங்கம் தேசிய அவமானத்தின் சின்னம் என்றால் அது மிகையில்லை. தமிழக விவசாயிகள் டெல்லியில் பிரதமர் மோடியை நேரடியாக சந்தித்து தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த தீவிர முயற்சிகள் மேற்கொண்டும் எந்தப் பயனும் ஏற்படாத நிலையிலேயே நிர்வாணப் போராட்டத்திற்கு உந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஆளும் பாஜக அரசு உணர்ந்திருப்பினும், இன்னும் அது விவசாயிகளை அழைத்துப் பேசாமல் மீண்டும் மீண்டும் பொன்.ராதாகிருஷ்ணனை அனுப்பி தேன் தடவிய நயவஞ்சக பேச்சுக்கள் மூலம் போராட்டத்தை கைவிட வைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதைப் பார்க்கும்போது ஆளும் பாஜக அரசு தமிழ்நாட்டையும் அதன் மக்களையும் மூன்றாம் தர மக்களாக முத்திரை குத்த நினைக்கிறது என்பது நிரூபணமாகியுள்ளது. பல தரப்புகளிலிருந்தும் தரப்பட்ட அழுத்தத்தின் காரணமாக முதல்வர் டெல்லியில் போராட்ட களத்தில் இருந்த விவசாயிகளை நேரடியாக சந்தித்த போராட்டத்தை வாபஸ் பெற வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளார். முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் உறுதிமொழியை ஏற்று விவசாயிகள் தங்கள் போராட்டத்தை ஒரு மாத காலத்திற்கு தள்ளி வைத்துள்ளனர். இதற்கிடையில் உச்ச நிதிமன்றத்தில் விவசாயிகள் தமிழகத்தில் தற்கொலை செய்துகொள்வதற்கு வறட்சி காரணமல்ல; மாரடைப்பு, வயது மூப்பு போன்றவைகளே காரணம் என்று தெரிவித்துள்ளது விவசாயிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் எரிச்சல் ஏற்பட வைத்துள்ளது. இதனால் அச்சமடைந்துள்ள விவசாயிகள் சங்கத் தலைவர் கோட்டையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்றமுறை நடுவண் அரசு தமிழக மக்களின் கலாச்சாரத்தின் மீது கை வைத்து சூடுபட்டுக் கொண்டதை ஜல்லிக்கட்டு போராட்டம் என்றென்றும் நினைவுபடுத்துவது போல இன்னொரு போராட்டத்தை விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் ஆதரவாக எடுக்க வேண்டிய அவசரமும் அவசியமும் எழுந்துள்ளது. தமிழ்நாடு அரசு ஊழயர் சங்கமும் அதன் ஊழியர்களும் ஜல்லிக்கட்டு போன்றதொரு இன்னொரு உக்கிரமான போராட்டத்திற்கு தொடக்கப் புள்ளியாக இருந்து அனைத்துத் தரப்பு மக்களையும் மாணவர்களையும் இளைஞர்களையும் பெண்களையும் ஒன்றிணைத்து போராடி விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கும் அரசு செய்ய வேண்டிய அனைத்து சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றுத்தர சபதமேற்றுள்ளோம். இந்த சபதம் நிறைவேறும் வரை போராட்டத்திற்கு அரசு ஊழியர்கள் விவசாயிகளுக்கு உறுதுணை இருந்து ஆதரவு அளிப்பார்கள். இப்போராட்டம் மீண்டும் ஒரு மக்கள் போராட்டமாக உருமாறும் என்பதில் ஐயமில்லை.

விவசாயத் தோழர்களே ஒன்றை நினைவிற் கொள்ளுங்கள்:

**"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"**

அரசு ஊழியர்களே ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்:

**"உழவுக்கும் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம் - வீணில்**
**உண்டுகளித் திருப்போரை**
**நிந்தனை செய்வோம்"**

ஆட்சியாளர்களே ஒன்றை நினைவிற் கொள்ளுங்கள்:

**"தேரோடும் சிமையிலே,**
**ரொம்பத் திமிராக போறவரே**
**இவங்க ஏரோட்டம் நின்னுபோனால்**
**உங்க காரோட்டம் என்னவாகும்?"**

– வேந்தன்

### ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களின் வேலை நிறுத்தம்

# பலமான போராட்டம், பலவீனமான காலம் நடந்தது என்ன?

**வ**ளர்ச்சித்துறை ஊழியர்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்படுகிறார்கள். கடுமையான தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே எல்லை மீறிய தொல்லையை தடுக்க வேண்டும். நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என நமது ஊழியர்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது.

மாநில செயற்குழு தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் 11.02.2017 அன்று கூடியது அதில் 2 கட்ட போராட்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

1) நெருக்கடியை நிறுத்தக்கோரி 20.02.2017 அன்று ஒட்டுமொத்த சிறுவிடுப்பு எடுத்து பெருந்திரள் முறையீடு செய்வது.

2) 20 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி 14.03.2017 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தத்தை துவக்குவது என முடிவு செய்யப்பட்டது.

காலவரையற்ற வேலை நிறத்தத்தை வெற்றிகரமாக்க 27.02.2017 முதல் 02.03.2017 வரை மாநிலம் தழுவிய வேன் பிரச்சார இயக்கம் நடைபெற்றது. இதில் மாநில நிர்வாகிகள் அனைவரும் மிக சக்தியாக பிரச்சார இயக்கத்தை நடத்தினார்கள். மாவட்ட நிர்வாகிகளும் உற்சாகத்துடன் செயல்பட்டார்கள். போராட்ட வீச்சும் தொலைக்காட்சிகள் செய்தியும் அரசின் கவனத்தை ஈர்த்தது. ஆனாலும் அரசு கண்டு கொள்ளாது போல் காட்டிக் கொண்டது. ஆனால் 27.02.2017 அன்று எந்த தொலைக் காட்சியைத் திருப்பினாலும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் காலவரையற்ற வேலை நிறுத்தம் என ஓடிக் கொண்டேயிருந்தது. அரசிடமிருந்து 28.02.2017 காலை தொலைபேசி மூலம் அழைப்பு வந்தது. என்ன வேலை நிறுத்தம் செய்கிறீர்களா? டி.வி.யில் ஓடுதாம் என்று கேட்கப்பட்டது. ஆம் அதற்கான தகவலை 14.02.2017 அன்றே அரசுக்கு அனுப்பியுள்ளோம். அரசு தரப்பில் இப்போது சூழ்நிலை சரியில்லை. நீங்களாக வந்து போராட்டத்தை முடித்துக் கொள்ளுங்கள் என்றார்கள். முறையான நடவடிக்கை எடுக்கப்படும் பட்சத்தில் முடித்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. 02.03.2017 அன்று வேலைநிறுத்தம் தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பெருந்திரள் முறையீடு செய்யப்பட்டது. அரசு தரப்பில் தொடர்ந்து தொலைபேசியில் போராட்டத்தை முடித்துக்கொள்ளுங்கள் என்று அன்றாடம் செய்தி வந்தது. 11.03.2017 அன்று பேச்சு வார்த்தைக்கு எழுத்துப்பூர்வமான கடிதம் கிடைக்கப்பெற்றது.

ஆனால் பேச்சுவார்த்தை 14.03.2017 காலை 11.00 மணிக்கு அழைத்தார்கள். தாமதமாக அழைத்ததால் மிக எழுச்சியோடு 14.03.2017 காலை 10.00 மணிக்கு போராட்டம் துவங்கியது. ஊராட்சி செயலாளர்கள், கணினி இயக்குபவர்கள், முழுச்சுகாதார ஒருங்கிணைப்பாளர், சாலை ஆய்வாளர்கள், ஒன்றிய பணி மேற்பார்வையாளர்கள், ஒன்றியப் பொறியாளர்கள் உதவிப் பொறியாளர்கள், இரவுக் காவலர் முதல் ஆணையாளர் வரை சுமார் 20500 பேர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். போராட்டத்திற்கு ஆதரவாக வளர்ச்சிப்பணி அலுவலர்கள் சங்கம் சிறுவிடுப்பு போராட்டம் 14.03.2017 அன்று நடத்தியது. ஊழியர்கள் ஆவேசத்தோடு பங்கேற்றார்கள். பேச்சு வார்த்தை 14.03.2017 அன்று 11.20க்கு துவங்கியது 3 மணி நேரம் நடைபெற்றது.

1) உதவி இயக்குநர் பதவி உயர்வு

2) கணினி இயக்குபவர் நிரந்தரம்

3) கணினி இயக்குபவர்களுக்கு MGNREGS தினக்கூலி அடிப்படையில் ஊதியம்

4) முழு சுகாதார வட்டார, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அத்திட்ட கணினி இயக்குபவர்கள் ஊதியம்.

5) ஒன்றியப் பணி மேற்பார்வையாளர்களுக்கான தொழில் நுட்ப அளவீடு மதிப்பு ரூ. 3 லட்சம். குடோன் பொறுப்பிற்கு புதிய நியமனம் செய்யப்படும் வரை அழுத்தம் கொடுக்கப்படமாட்டாது.

6) உதவிப் பொறியாளர்கள் அனைவருக்கம் சம ஊதியம்.

7) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்விற்கு ஊர்நல அலுவலர் நிலை I கட்டாயம் என்ற ஒரு பணி விதி தளர்வு.

8) சில்லரைச் செலவினப் பணியாளர்கள் பணிவரன்முறை

9) மின் பணியாளர்கள் முந்தைய பணிக்காலம் தேர்வுநிலை சிறப்பு நிலைக்கு சேர்த்துக் கொள்வது.

10) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சிறுசேமிப்பு, மகளிர் திட்ட உதவி இயக்குநர் பணியிடங்கள்

11) குடிநீர் மேல் நிலைத் தொட்டி இயக்குபவர்கள் சம்பளம்.

12) முந்தைய வேலை நிறுத்த காலம் வரன்முறைப்படுத்துதல் போன்ற 20 அம்சக் கோரிக்கையில் 12 கோரிக்கை ஏற்கப்பட்டது.

ஆனால் ஊராட்சி செயலாளருக்கும், BDO-விற்கும் கோரிக்கை ஏற்க இயலாது என தெரிவிக்கப்பட்டதால் போராட்டம் தொடர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. 14.03.2017 மற்றும் 15.03.2017 ஆகிய இரண்டு நாட்கள் 385 வட்டாரங்களிலும், 32 மாவட்டத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 15.03.2017 அன்று அரசு முதன்மைச் செயலாளரிடம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. கணினி இயக்குபவர்களுக்கு இன்று மாலைக்குள் உத்தரவு தருகிறோம். AD பதவி உயர்வு நாளை தருகிறோம். இயக்குநர் ஏற்றுக் கொண்டதற்கெல்லாம் ஒவ்வொன்றாக அரசாணை தருகிறோம் என்றார். ஊராட்சி செயலாளர் கோரிக்கை ஏற்கவில்லை. 15.03.2017 மாவட்ட தலைநகர் பேரணி நடைபெற்றது. அன்றைய தினம் வேலை நிறுத்தத்தில் 21824 பேர் பங்கேற்றனர். பேச்சுவார்த்தை நிறைவு பெறாததால் போராட்ட முடிவுகள் மாற்றப்பட்டது. 16.03.2017 அன்று மாவட்ட தலைநகர் ஆர்ப்பாட்டம் வேலை நிறுத்த எண்ணிக்கை உச்சத்தை அடைந்தது 22684 பேர் பங்கேற்றனர். நாளுக்கு நாள் போராட்ட வீச்சு வீருகொண்டெழுந்தது. 17.03.2017 மறியல் போர் தமிழகம் முழுவதும் மறியலில் 9000பேர் பங்கேற்றனர். அரசு அசையவில்லை. மேலும் போராட்ட வியூகம் மாறியது. 19.03.2017 திருச்சியில் மாநிலச் செயற்குழு 17.03.2017ல் நடத்த வேண்டும் என திருச்சி மாவட்டத்திற்கு தகவல் சொல்லப்பட்டது, தகவல் சொன்னவுடன் திருச்சியில் ஒரே நாளில் சிறப்பான ஏற்பாட்டுடன் மாநிலச் செயற்குழு திருச்சி மாவட்டம் நடத்திக் கொடுத்தது. திருச்சி மாவட்டம் ஆபத்திற்குதவியது பெருமைக்குரியது. அதற்காக சிறப்பு முயற்சி எடுத்த மாநிலச் செயலாளர் தோழர். பழனியப்பன் பாராட்டுதலுக்குரியவர். இரண்டாண்டுகளுக்குப் பின் 32 மாவட்டம் பங்கேற்ற மாநிலச் செயற்குழுவாக இருந்தது. நடந்த விபரங்கள் எல்லாம் மாநிலச் செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. போராட்ட வடிவத்தில் மேலும் மாற்றம் செய்யப்பட்டு 20, 21.03.2017 அன்று காத்திருப்பு போராட்டம் மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் நடத்துவது. 22.03.2017 அன்று அனைவரையும் சென்னைக்கு வரவழைத்து இயக்குநரைச் சந்தித்து மிக சக்தியான முறையீடு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

## காத்திருப்பு போராட்டம்

மிக சக்தியாக ஒரு மாவட்டத்தை, ஒரு மாவட்டம் மிஞ்சும் அளவிற்கு 20.03.2017 மற்றும் 21.03.2017 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. 21.03.2017 அன்று பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டது. பேச்சுவார்த்தை தோல்வியயீல் முடிவுற்றது. 21.03.2017 இரவு 9.00 மணிக்கு மாநில நிர்வாகிகளை காவல்துறை அழைத்துப் பேசியது. பனகல் மாளிகைக்கு யாரும் வரக்கூடாது. கின்டி மைதானத்தில் வாகனங்களை நிறுத்தி அங்கேயே போராட்டம் நடத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. நாம் ஏற்றுக் கொள்ளவில்லை திட்டமிட்டபடி போராட்டம் நடத்தப்படும் என்றோம். காவல் துறை கைது செய்யப்படுவீர்கள் என்றதுழே பரவாயில்லை என்றோம். இறுதியாக வாகனங்களில் இருந்து இறங்க இறங்க கைது செய்வோம் என்ற காவல்துறை சொன்னது.

மாவட்டங்களில் பகிர்ந்து கொண்டோம். காலையில் கொடிகட்டும்போது காவல்துறை பிரச்சனை செய்தது. இவை அனைத்துப் பணிகளிலும் நமது முன்னாள் மாநிலத் துணைத்தலைவரும் வளர்ச்சிப்பணி அலுவலர்கள் சங்க மாநிலப் பொருளாளருமான கென்னடி பூபாலராயன் மற்றும் ஜான் செல்வராஜ் உடன் இருந்து உதவி புரிந்தார்கள்.

மாவட்ட நிர்வாகிகள் மிகத் திறமையாக தென் பகுதியில் இருந்து வந்தவர்கள் கின்டி தாம்பரத்தில் இறங்கி மின் ரயில் மூலமும் வடக்கே இருந்து வந்தவர்கள் எக்மோரிலிருந்து ரயில் மூலம் 9.00 மணிக்கெல்லாம் கூடிவிட்டார்கள். 10 மணிக்கு சுமார் 10,000க்கும் மேற்பட்டோர் திரண்டு வந்தனர். கென்னடி உடனடியாக தற்காலிக மேடை, மைக்செட் ஏற்பாடு செய்தார். தோழர். புஷ்பநாதன் 10 மணி முதல் 12 மணி வரை வீரகோசம் முழங்கினார். ஊழியர்கள் மிகுந்த கோபத்தோடு வாகனத்தில் ஏறினார்கள். காவல் துறை 113 வாகனம் கொண்டு வந்தது. ஒரு வண்டிக்கு 70 முதல் 80 பேர் வரை நெருக்கமாக ஏறியும் முடியவில்லை. நமது வாகனத்தில் 20 வாகனம் கொடுக்கப்பட்டது. அதன் மூலமும் ஏற்றி ஒய்எம்சிஏ மைதானத்தில் இறக்கிவிட்டார்கள். மொத்தம் 11846 பேர் பங்கேற்றனர். காவல்துறை முதலில் 5000 பேருக்கு மட்டும் உணவு ஏற்பாடு செய்திருந்தனர். கூட்டத்தின் எண்ணிக்கை உறுதி செய்தபின் அரை மணி நேரத்தில் அனைவருக்கும் உணவு பரிமாறினார்கள் உள்ளே சென்றவுடன் மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வாரியாக நாமே முகவரி பதிவு செய்து கையொப்பத்துடன் கொடுத்தார்கள். 3 மணிக்கு பேச்சு வார்த்தைக்கு காவல்துறை வாகனத்தில் 15 மாநில நிர்வாகிகளையும் அழைத்துச் சென்றார்கள். தலைமைச் செயலகத்திற்குள் நுழையும்போது நமக்கும் காவல்துறைக்கும் முரண்பாடு ஏற்பட்டது. அதற்கு பின்பு 2 மணிநேரம் அரசு முதன்மைச் செயலாளர், இயக்குநரோடு பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சு வார்த்தையில் இயக்குநர் ஏற்றுக்கொண்ட கோரிக்கை முழுவதும் ஏற்கப்படும் எனவும், ஊராட்சி செயலாளர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரின் கோரிக்கையை ஏற்க முடியாது எனவும் கூறினார். தற்போதைய சூழ்நிலையை புரிந்து கொண்டு போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வாருங்கள் என வலியுறுத்தினார்கள். நாம் போராட்டம் தொடரும் என கூறிவிட்டு ஒய்எம்சிஏ மைதானம் வந்தோம். மைதானத்தில் மாநில நிர்வாகிகள் வருமுன் காவல்துறை அனைவரையும் விடுதலை செய்தது. ஆனாலும் 9000 பேர் மைதானத்தை விட்டுப் போகவில்லை. கலைந்து செல்ல வேண்டும் என காவல்துறை நிர்பந்தம் செய்தது. ஊழியர்கள் அனைவரும் உருக்குப் போன்ற ஒற்றுமையோடு காத்திருப்பு போராட்டம் நடைபெறும் என தெரிவித்துவிட்டார்கள். அரசு ஊழியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் தோழர் இரா.தமிழ்செல்வி, மாநிலப் பொதுச் செயலாளர் மு.அன்பரசு, மாநில பொருளாளர் தங்கராசு, மாநிலத் துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி, மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி மற்றும் சென்னை மாவட்ட அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் மைதானத்திற்கு வந்து வழி நடத்தினார்கள். இரவு அரசு ஊழியர் சங்கம் சார்பில் 3000 பேருக்கு உணவும், TNRDOA மாநிலத்தின் சார்பில் தோழர் கென்னடி உதவியுடன் சுமார் 4000 பேருக்கு உணவும் வழங்கப்பட்டது. விஷப் பாம்புகள் உள்ள பகுதி என மிரட்டினார்கள். அதையும் மீறி ஆண்களும், பெண்களும் மைதானத்தில் தங்கியது பாராட்டுக்குரியது. மாநில நிர்வாகிகள் 10 பேர் மைதானத்தில் ஊழியர்களுடன் தங்கினார்கள். மாநிலத் தலைவரை தொலைக்காட்சியினர் இரவு முழுவதும் தூங்கவிடாமல் பேட்டி கேட்டதும் அரசின் கண்டு கொள்ளாத போக்கையும் எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். காலை 7.00 மணிக்கு பொதுச் செயலாளர் தொலைக்காட்சிக்கு பேட்டி கொடுத்து கொண்டிருந்தபோது பின்னர் இருந்த மாநிலத் தலைவர் மைதானத்திலேயே மயங்கி விழுந்தார். அருகாமையில் இருந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு இருதய வலிக்கான ஆரம்ப நிலை என மருத்துவர்கள் சொன்னது போர்களத்தில் இருந்த அனைவரையும் கண்கலங்க வைத்தது. காலை 10.00 மணிக்கு மாநில செயற்குழு கூடியது, மதுரை, நாகை, தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 4 மாவட்டங்கள் நீங்கலாக 28 மாவட்டம் பங்கேற்றது. அரசு 11.00 மணிக்கு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. பேச்சு வார்த்தை 12.00 மணிக்கு ஆரம்பித்து 2.00 மணி வரை நடந்தது. உள்ளே சென்றதும் மாநிலத் தலைவரின் உடல் நிலையை விசாரித்தார்கள். 11ம் தேதியிலிருந்து பேசிய பேச்சிற்கும், 23ம் தேதி பேசிய பேச்சிற்கும் மாறுபாடு இருந்தது. ஊராட்சி செயலாளர்களுக்கு தேர்வு நிலை, சிறப்பு நிலை பொறுப்புப்படிகள் வழங்கப்படும். ஊராட்சி செயலாளர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஊதியம் ஊதியக்குழுதான்

முடிவு செய்யும் என்றார்கள். நம் தரப்பில் ஊராட்சி செயலாளர் ஊதியத்திலும் பேச்சுவார்த்தைகளுக்கான குறிப்பு எழுத்துப் பூர்வமாக வேண்டும் என்பதிலும் விடாப்பிடியாக இருந்தோம். அரசு தரப்பில் கலந்து பேசி சொல்கிறோம். 4 மணிக்கு வரவும் என்றார்கள். சரியாக 3.30 மணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டது. அரசு அதிகாரிகள் மட்டத்தில் மிகுந்த மனக் கசப்போடு இருந்தார்கள் என்பதை உணர முடிந்தது. சமயோஜிதமான பேச்சுவார்த்தை, இறுதியாக மகிழ்ச்சியளித்தது. நிர்வாகத்த ரப்பில் நம்பிக்கையோடு நல்லெண்ணத்தின் அடிப்படையில் முடியுங்கள் என்று மிகுந்த பாசத்தோடு கோரியது மன அசைவை ஏற்படுத்தியது. நாமும் கலந்து பேசிச் சொல்கிறோம். 5 நிமிடம் அவகாசம் கேட்டோம். மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்கள். மாநில நிர்வாகிகள் வெளியில் வந்து கலந்து பேசினோம். அகச் சூழ்நிலை, புறச் சூழ்நிலையைக் கணக்கில் கொண்டு முடிப்பது என முடிவு செய்து உள்ளே சென்றோம். அரசு தரப்பில் மிகுந்த எதிர்ப்பார்ப்போடு அழைத்தார்கள். மாநிலத் தலைவரின் உடல் நிலையை கவனித்துக் கொள்ள அறிவுறுத்தினார்கள். நம்பிக்கையோடு நல்லெண்ணத்தின் அடிப்படையில் முடியுங்கள் என கூறினார்கள். நாமும் ஊராட்சி செயலாளர்களுக்கு இளநிலை உதவியாளருக்கு இணையான ஊதியம் கிடைக்க நம்பலாமா என்று மீண்டும் மீண்டும் வினவினோம். அரசு தரப்பில் ஊதியக்குழு முன் மொழிவு கோரும் போது உறுதியாக வலுவான காரணத்துடன் அனுப்பப்படும். அதற்காக அரசு செயலாளர் எடுத்துள்ள முன் முயற்சிக்கான கோப்பு குறிப்பு தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஏற்கனவே ஏற்றுக் கொண்ட கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அரசாணைகள் தொடர்ந்து வரும் எனவும் நம்பிக்கையோடு நல்லெண்ணத்தோடு போராட்டத்தை முடியுங்கள் என வலியுறுத்தினார்கள். கீழ்க்கண்ட கோரிக்கைகள் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பேச்சு வார்த்தையின்போது ஒப்புக்கண்ட கோரிக்கைகள்

1) ஊராட்சி செயலாளர்களுக்கு, இளநிலை உதவியாளருக்கு இணையான ஊதியம் தொடர்பாக சங்கத்தின் சார்பாக ஊதியக் குழுவிற்கு வழங்கப்படும் மனு மீதான கருத்துரு, கேட்கப்படும்போது அதற்குரிய வலுவான காரணங்களுடன் ஊதியக் குழுவிற்கு பரிந்துரைக்கப்படும்.

2) தேர்வு நிலை, சிறப்புநிலை மற்றும் தேக்கநிலை ஊதிய உயர்விற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

3) கூடுதல் பொறுப்புப்படி ஊராட்சி நிதியில் கணக்கு எண். 7ல் வழங்க அரசாணை விரைவில் வழங்கப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஊதிய முரண்பாடுகளை களைய சங்கத்தின் சார்பாக ஊதியக் குழுவிற்கு வழங்கப்படும் மனு மீதான கருத்துரு கேட்கப்படும்போது அதற்குரிய வலுவான காரணங்களுடன் ஊதியக் குழுவிற்கு பரிந்துரைக்கப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் பணிபுரியும் அவுட்சோர்சிங் உட்பட அனைத்து கணினி இயக்குபவர்களுக்கும் அரசாணை நிலை எண். 71 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை /ம/அ/தி.1 நாள் : 20.06.2014ன்படி ஊதியம் ஒவ்வொரு ஆண்டும் அத்திட்ட பயனாளிகளுக்கு வழங்கும் தினக்கூலிக்கேற்ப தொடர்ந்து மாற்றி அமைக்க உத்தரவிடப்படும்.

முழுச் சுகாதார வட்டார, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் இத்திட்டத்திற்கான கணினி இயக்குபவர்களுக்கு ஊதியம் உயர்த்தி வழங்கப்படும்.

ஒன்றியப் பணி மேற்பார்வையாளர்கள்

1) தொழில்நுட்ப மதிப்பீடு ரூ.3.00 லட்சமாக உயர்த்தப்படும்.

2) புதிய நியமனம் செய்யப்படும் வரை குடோன் பொறுப்பிற்கு அழுத்தம் கொடுக்கப்படமாட்டாது.

3) பதவி உயர்வு அரசாணை எண்.27. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள்: 26.02.2016ன் படி அமுல்படுத்தப்படும்.

4) உதவிப்பொறியாளர்கள் அனைவருக்கும் சம ஊதியம் வழங்கப்படும்.

5) சாலை ஆய்வாளர்கள் பதவி உயர்வு அந்தந்த மாவட்டங்களில் வழங்கப்பட்டு வருகிறது. தேக்கம் உள்ள மாவட்டம் தெரிவிக்கப்பட்டால் உடன் தலையிடலாம் என முடிவு செய்யப்பட்டது. துறைத்தேர்வு தொடர்பாக தெளிவுரை வழங்கப்படும்.

6) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பதவி உயர்விற்கு ஊர்நல அலுவலர் நிலை I கட்டாயம் என்ற ஒரு பணி விதி தளர்வு செய்யப்படும்.

7) சில்லரைச் செலவினப் பணியாளர்கள் பணிவரன்முறை உத்தரவு விரைவில் வெளியிடப்படும்.

8) மின்பணியாளர்களின் முந்தைய பணிக்காலம் தேர்வுநிலை சிறப்பு நிலைக்கு சேர்த்துக் கொள்ள அரசாணை வழங்கப்படும்.

9) பதவி உயர்வு அரசாணை எண்.27, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நாள் : 26.02.2016ன் படி அமுல்படுத்தப்படும்.

10) நிதித்துறை மற்றும் சிறுசேமிப்புத்துறை வாயிலாக நிரப்பப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைக்குரிய மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) பணியிடத்தை பெற நடவடிக்கை எடுக்கப்படும். மகளிர் திட்டத்தில் உள்ள உதவி திட்ட அலுவலர் பணியிடம் குறித்து பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.

11) குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்களில் 10.05.2000க்கு பின் நியமிக்கப்பட்டவர்களில் குறிப்பிட்ட தேதி வரை என தேதி நிர்ணயம் செய்து அதுவரை உள்ளவர்களுக்கு பின்னேற்பு வழங்கப்படும்.

இந்தப் போராட்டத்தில் கிருஷ்ணகிரியைச் சார்ந்த ஜோதிமணி தலைமையிலான குடிநீர் மேல்நிலைத்தொட்டி இயக்குபவர்கள் சங்கம் முழுமையாக 10 நாளும் கலந்துகொண்டனர். CITU தலைமையிலான ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை ஊழியர் சம்மேளனம் 20.03.2017 ஒரு நாள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வேலை நிறுத்தம் துவங்கிய நாள் முதல் இரட்டைக்குழல் துப்பாக்கி என்பதை நிரூபிக்கும் வகையில் வளர்ச்சித்துறைப் பணிகளை செய்யமாட்டோம் என முதலில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. TNROA அதன் பின் 20.03.2017 ஒரு மணி நேர வெளிநடப்பு செய்து ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்து அமுல்படுத்தினார்கள். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் TNGEA சார்பில் 16.03.2017 அன்று போராட்டத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்த அறைகூல் விடப்பட்டது. பெரும்பாலான மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

போராட்டம் அறிவிக்கப்பட்ட நாள் முதல் பத்திரிக்கைகளும், ஊடகங்களும் சிறப்பாக உதவி புரிந்தார்கள். ஆபத்திற்கு எப்போதும் உதவும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்க உதவியும் இந்த நேரத்தில் மறக்க முடியாது. தோழர்களே எல்லாவற்றிற்கும் மேலாக ஊழியர்களின் வலுவான ஒற்றுமை பெரிதும் பாராட்டுக்குரியது.

ஒவ்வொரு போராட்டமும் ஒவ்வொரு படிப்பினையை தந்தது. இந்தப் போராட்டம் துவங்குவதற்கு முன்பே 14 மாத காலம் இழுத்தடித்து வந்த இணை இயக்குநர் பதவி உயர்வு ஆணை பெறப்பட்டது. 13 ஆண்டுகாலம் உதவி இயக்குநர் பதவிக்கான பணி வரன்முறை செய்யாததால் 96 உதவி இயக்குநர் பதவி உயர்வு 13 மாதம் காலியாக இருந்தது. ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் நடவடிக்கையில் இருந்தும், சென்னை இயக்குநரகத்திற்குரிய 2 உதவி இயக்குனர் பதவி நீங்கலாக 94 பணியிடங்களுக்கான பதவி உயர்விற்கான அரசாணை 16.03.2017ல் வெளியானது. இதன் மூலம் தமிழகம் முழுவதும் 469 பேருக்கு பதவி உயர்வு வாய்ப்பு கிட்டியுள்ளது. மேலும் 2014ம் ஆண்டு முதல் கணினி இயக்குபவர்களுக்கான TNPSC சிறப்புத் தேர்விற்கான கோப்பு நிலுவையில் இருந்தது. இந்த போராட்டத்தின் மூலம் உத்தரவு 22.03.2017 அன்று பெறப்பட்டுள்ளது. 906 பேர் வாழ்க்கை துளிர்விட ஆரம்பித்துள்ளது. போராட்டத்தில் உள்ளபோதே அரசாணை பெற்றது மகத்தான சாதனை. மேலும் சுமார் 10,000க்கும் மேற்பட்ட குடிநீர் மேல்நிலைத்தொட்டி இயக்குபவர்கள் ஊதியம் கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் பெயர் பட்டியல் இளையதளத்தில் பதிவு செய்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் அவர்களின் ந.க.எண். 20570/2017/இ2 நாள் : 30.03.2017ல்


உத்தரவிடப்பட்டுள்ளது. சத்துணவு பிரிவுக்கு கணினி இயக்குபவர்களை நியமிக்க 19.04.2017ஆம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு)-களின் ஆய்வுக் கூட்டத்தில் சமூக நலத்துறை இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் பணியாளர்களின் முந்தைய பணிக்காலத்தை (TWAD) தேர்வு நிலை, சிறப்பு நிலைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. ஒன்றிய பணி மேற்பார்வையாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி உயர்வு பதவி உயர்வு வழங்க தேர்ந்தோர் பட்டியல் கோரப்பட்டுள்ளது. இதுவெல்லாம் நம் போராட்டத்தின் வெற்றி என்பதை மகிழ்ச்சியோடு ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்.

வேலை நிறுத்தத்தில் உள்ளபோதே AD பதவி உயர்வு வந்ததால் 32 பேர் பணியேற்க இயலவில்லை. 23ம் தேதி வரை பணியேற்காதவர்கள் இயக்குநரைச் சந்திக்க வேண்டும் என வாய்மொழி உத்தரவு வரப்பெற்றது. 23ம் தேதி வரை சென்னையில் இருந்து வந்த மாநில நிர்வாகிகள் மீண்டும் 24ம் தேதியே சென்னை திரும்பி 25ம் தேதி இயக்குநரைச் சந்தித்து பேசப்பட்டது. அனைவரையும் பணியில் சேர அனுமதித்தார்.

தோழர்களே!

போராட்டம் மகத்தான வெற்றியைத் தந்துள்ளது. இதை மாவட்டந்தோறும் சிறப்பாக கொண்டாட வேண்டும். நாம் அடைந்த வெற்றிகளை நாமே வெளியே சொல்லாமல் இருந்தால் காலதாமத்தை காரணம் காட்டி ஊழியர்களை திசை திருப்புவார்கள். மதிப்பு இல்லாத பொருளைக் கூட விளம்பரம் மூலம் விற்பனை செய்கிறார்கள். நாம் வீரமிக்க போராட்டம் நடத்தியதை உள் வாங்கியும், 7 உத்தரவுகள் பெற்றதையும், பெற வேண்டியதை நம்மால் மட்டும்தான் பெற்றுத்தர முடியும் என்று மாவட்டந்தோறும் போராட்ட படிப்பினையை பிரச்சாரம் செய்யவேண்டும். அத்தோடு அரசு எந்திரம் அடக்குமுறை கருவி என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தற்போது பழி வாங்கும் நடவடிக்கைகளும், ஊதிய பிடித்தத்திற்கான நிர்ப்பந்தத்தையும் உள்வாங்க வேண்டும்.

**- பெ.கிருஷ்ணசாமி,**
மாநில பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம்.



தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் விவசாயிகளுக்கு ஆதரவாக திமுக மற்றும் அனைத்துக் கட்சிகள் நடத்திய 25.4.2017 முழுஅடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு கேட்டு நமக்கு அனுப்பிய கடிதமும் அதற்கு நாம் அனுப்பிய பதிலும், அதற்குப் பின், போராட்டத்தில் கலந்து கொண்டதற்கு நன்றி தெரிவித்த அவர் நமக்கு அனுப்பிய மடலும், அதற்கான பதிலோடு அவர் நம்முடைய காலவரையற்ற போராட்டத்தினை அரசு உடனடியாக கவனித்து சங்கத்தலைவர்களை அழைத்துப் பேசி முடிவு காண வேண்டும் என்று ஊடகங்கள் வாயிலாக தெரிவித்தமைக்காக பாராட்டுதல்களையும் வாழ்த்தக்களையும் தெரிவித்து நாம் அனுப்பிய கடிதமும் அனைத்து ஊழியர்களின் பார்வைக்காக

மு.க. ஸ்டாலின்
எதிர்க்கட்சித் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள்: 16–4–2017.

அன்பார்ந்த திரு. இரா.அன்பரசு அவர்களுக்கு,

வணக்கம்,

ஒரு நூற்றாண்டு வரலாறு காணாத கடும் வறட்சி விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் வறுமையில் ஆழ்த்தியுள்ளது. அவர்களது குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தைத் தொலைத்து விட்டு அடுத்தவேளை உணவுக்கு என்ன செய்வது என்ற சோகத்தில் துவண்டு கிடக்கிறார்கள். மாநிலத்தில் உள்ள மக்கள் தொகையில் 70 சதவீதத்திற்கும் மேல் விவசாயத்தையும், விவசாயம் சார்ந்த தொழில்களையும் நம்பியிருப்பவர்கள் என்பதால், தமிழகத்தில் விவசாயத்திற்குட்பட்ட 63 லட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு மேல் வறண்டு போகும் மிகப்பெரிய ஆபத்து ஏற்பட்டு விட்டது.

விவசாயிகள் தாங்கள் இழந்த நெற்பயிர்களுக்கும் மானாவரிப் பயிர்களுக்கும் போதிய இழப்பீடு வழங்கிக் காப்பாற்றுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறார்கள். தேசிய வங்கிகளில் வாங்கிய விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று கோரிக்கை விடுக்கிறார்கள். விவசாயியின் தனி நபர் வருமானம் உயரவில்லை. அவர் பிள்ளை வாங்கிய கல்விக்கடனையும் திருப்பிச் செலுத்த முடியவில்லை. வாழ்க்கையின் முட்டுச் சந்தில் மாட்டிக் கொண்ட விவசாயிகள் விரக்தியின் எல்லைக்கே சென்று தற்கொலை செய்து கொண்டு மடிகிறார்கள். இதுவரை 400க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது மனிதாபிமானம் உள்ள எல்லோருக்கும் அதிர்ச்சி அளிப்பதோடு மட்டுமின்றி அடிவயிற்றைக் கலக்கும் ஆபத்தான சூழ்நிலையாக இருக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றமே விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யுங்கள் என்றாலும், உச்சநீதிமன்றமே விவசாயிகள் தற்கொலையை தடுக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அதிமுக அரசைக் கவலையோடு கடிந்து கொண்டாலும், விவசாயிகள் அவல நிலையைப் போக்க, அவர்களின் துயர் துடைக்க ஆளும் அதிமுக அரசும் முன்வரவில்லை; மத்தியில் ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க. அரசும் மனம் இரங்கவில்லை.34 நாட்களாக தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் தமது உயிரைப் பணயம் வைத்து விதவிதமாகப் போராடியும் மத்திய அரசு கண்திறக்கவில்லை.இந்த நாட்டின் முதுகெலும்புகளான விவசாயிகள் போராடுகிறார்களே என்று பிரதமரோ, தமிழக முதலமைச்சரோ மனம் பதறவில்லை.

ஆனால் அனைத்துக் கட்சிகளும் விவசாயிகளின் வேதனைகளை ஆழமாக உணருகின்றன. தமிழக விவசாயிகள் ஆதரவற்றவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் பொருட்டு, தமிழகச் சட்டமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் 16.4.2017 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு அதில் அனைத்து அரசியல் கட்சிகளும்

மு.க. ஸ்டாலின்
எதிர்க்கட்சித் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள்: ..............................

.. 2 ..

பங்கேற்றுள்ளன. அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட கட்சிகள் சில வராமல் இருக்கலாம். ஆனால் விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உள்ளுணர்வு அவர்களுக்கும் உண்டு என்பதை நான் அறிவேன். நடைபெற்ற இந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டு விவசாயிகளை வேதனைக்காளாக்கி வரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல் செய்து, விவசாயிகளின் நலன் காக்கும் 19 தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அதில் “வருகின்ற 25.4.2017 அன்று விவசாயிகளின் கோரிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி மாநிலம் தழுவிய முழு அடைப்புப் போராட்டம் நடத்துவது” என்பது மிக முக்கியத் தீர்மானம்.

விவசாயிகளின் உரிமைகளை மீட்டெடுத்து நிலைநாட்டவும், வாடிக் கொண்டிருக்கும் விவசாயிகளின் குடும்பங்களை அரவணைக்கவும் மத்திய மாநில அரசுகள் ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும் என்று வலியுறுத்தவே ஜனநாயக ரீதியில் செயல்படும் அனைத்துக் கட்சிகளும் இந்த முழு அடைப்புப் போராட்டத்தை அறிவித்துள்ளது என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். அந்தவகையில் 25.4.2017 அன்று காலை 6.00 மணிக்குத் துவங்கி மாலை 6.00 மணி வரை முழுஅடைப்புப் போராட்டம் அறவழியில் அமைதியான முறையில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முழுஅடைப்புப் போராட்டத்திற்கு தங்களின் முழுமையான ஆதரவை நல்கி விவசாயிகளின் விழிகளில் இருந்து கசிந்து கொண்டிருக்கும் கண்ணீரைத் துடைக்கும் கருணை மிகுந்த அறப் பணியில் நீங்களும் அனைத்துக் கட்சிகளுடன் இணைந்து உறுதுணை நிற்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இது ஏதோ தனிப்பட்ட எனக்கோ, உங்களுக்கோ நடத்தப்படும் முழு அடைப்புப் போராட்டம் அல்ல. நாளைய பொழுது நல்லபடி விடியும் துன்பம் யாவும் விலகும் என்று காத்திருக்கும் விவசாயிகளின் உணர்வுகளைப் போற்றி நடைபெறும் அறவழிப் போராட்டம் என்பதை உணர்ந்து இந்த நாட்டின் நாடிநரம்புகளாகத் திகழும் விவசாயிகளைப் பாதுகாக்கப் பெருமளவில் தங்கள் அமைப்பின் சார்பில் போராட்டத்தில் கலந்து கொண்டு, முழு அடைப்புப் போராட்டத்தை வெற்றி பெற வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்!

தங்கள் அன்புள்ள,

16/4/2017.

(மு.க. ஸ்டாலின்)

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தோழத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com


பெறுதல் தேதி : 21.04.2017

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

எதிர்க்கட்சித் தலைவர்

தலைமைச் செயலகம்

சென்னை 600009.

மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தமிழக சட்டமன்றப் பேரவை எதிர்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் புரட்சிகர வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களின் 16.4.2017 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றோம். அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து தமிழக விவசாயிகளுக்காக ஓங்கிக் குரல் கொடுக்க தாங்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வரவேற்கிறது. அதே சமயம் சில விஷயங்களையும் கவலையோடு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கு நிவராணம் வழங்குவதாலும், அவர்களின் பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்து விடுவதாலும் விவசாயிகளின் பிரச்சனைகள் தற்காலிகமாக தீர்ந்துவிடக்கூடும். ஆனால், இனி ஒவ்வொரு வருடமும் இதுதான் நிலைமையா? இந்த நிலை மாறி அவர்கள் அரசாங்கத்திடம் கையேந்தாத நிலை வரவேண்டும் என்பதும், அவர்களின் நிலையான வாழ்வாதாரத்திற்கான ஏற்பாடுகளை உருவாக்கித் தரவேண்டும் என்பதுவுமே எங்கள் இயக்கத்தின் நிலைப்பாடாகும்.

அதனடிப்படையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் விவசாயிகளின் பிரச்னைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிற இயக்கமாகும். குரல் கொடுப்பதோடு நில்லாமல் வரலாறு காணாத வறட்சியில் சிக்குண்ட விவசாயிகளுக்காக ‘‘ஜாக்டோ-ஜியோ” என்ற அரசு ஊழியர்-ஆசிரியர் கூட்டமைப்பில் உள்ள 63 சங்கங்களின் ஊழியர்கள் அனைவரும் எங்கள் ஒருநாள் ஊதியத்தை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கிடத் தீர்மானித்து 10.01.2017 அன்று தமிழக அரசிடம் தெரிவித்துள்ளோம். மேலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 19.4.2017ம் தேதி தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், விவசாயம் மற்றும் விவசாயிகளைக் காக்க மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டங்களை நடத்திட முடிவு செய்துள்ளது. தாங்கள் அறிவித்துள்ள 25.4.2017ம் தேதி முழு அடைப்பு போராட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் தன்னுடைய ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது. அதே நாளில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசு ஊழியர்களின் பல்வேறு நிலுவை கோரிக்கைகளுக்காக காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தொடங்கவுள்ளதால் அன்றைய வேலை நிறுத்தப் போராட்டம் விவசாயிகளுக்கான போராட்டமாகவும் நடைபெறும் என்பதையும், தமிழக விவசாயிகளுக்காக நடைபெறும் அனைத்துப் போராட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எப்போதும் தார்மீக ஆதரவு கொடுக்கும் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக விவசாயிகளின் விடியலுக்காக நடத்தப்படும் போராட்டங்கள் அனைத்தும் வெற்றிபெற அனைவரும் ஒன்றிணைவோம். போராடுவோம்.

நன் மதிப்புகளுடன்

தோழமையுள்ள,

**(மு. அன்பரசு)**

பொதுச் செயலாளர்

மு.க. ஸ்டாலின்
எதிர்க்கட்சித் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள்: 26–4–2017

அன்பார்ந்த திரு. இரா. அன்பரசு அவர்களுக்கு,

வணக்கம்.

தமிழக விவசாயிகளின் நலன் காக்கவும் தமிழ்நாட்டின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் மத்திய–மாநில அரசுகளை வலியுறுத்தும் வகையில் தி.மு.க. மற்றும் அனைத்துக் கட்சிகள் முன்னெடுத்த முழு அடைப்புப் போராட்டத்திற்கு தங்கள் அமைப்பின் ஆதரவினைக் கோரியிருந்தேன். அதனை ஏற்று, ஏப்ரல் 25 அன்று நடைபெற்ற முழு அடைப்புப் போராட்டத்தில் தங்கள் அமைப்பினர் பங்கேற்று, விவசாயிகள்–பொதுமக்கள் ஆகியோரின் நலன் காக்க துணை நின்றமைக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப் பிரச்சினைகளை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்காமல், நல்ல தீர்வு கிடைக்க முழுமையான ஒத்துழைப்பு அவசியம் என்ற நல்லெண்ணத்துடன் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி, ஒத்துழைப்பு தந்து, முழு அடைப்புப் போராட்டத்தினை வெற்றி பெறச் செய்தமைக்கு மனமார்ந்த நன்றி.

மக்கள் நலனில் இணைந்து நிற்போம்.

தங்கள் அன்புள்ள,

26/4/2017

(மு.க. ஸ்டாலின்)

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தோரஹத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com



மாநிலத் தலைவர்
மு.சுப்பிரமணியன்

பொதுச் செயலாளர்
மு.அன்பரசு

மாநில துணைத் தலைவர்கள்
ந.குமாரவேல்
ஆ.செல்வம்
எஸ்.தமிழ்ச்செல்வி
சு.பார்த்திபன்
மொ.ஞானத்தம்பி
மு.சுப்பிரமணியன்

மாநிலப் பொருளாளர்
எம்.தங்கராஜ்

மாநிலச் செயலாளர்கள்
இரா.பன்னீர்செல்வம்
சி.ஆர்.இராஜகுமார்
என்.ஜனார்த்தனன்
தி.கலைசெல்வி
எம்.சௌந்தரராஜன்
ஏ.பெரியசாமி


பெறுதல் தேதி : 02.05.2017

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
எதிர்க்கட்சித் தலைவர்
தலைமைச் செயலகம், சென்னை 600009.

தோழமையுள்ள திரு. மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கட்கு, வணக்கம்.

தமிழக விவசாயிகளின் நலன் காக்கவும், தமிழகத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் மத்திய-மாநில அரசுகளை வலியுறுத்தும் வகையில் திமுக மற்றும் அனைத்துக் கட்சிகள் முன்னெடுத்த 25.4.2017 முழு அடைப்புப் போராட்டம் முழு வெற்றி அடைந்தமைக்கு வாழ்த்துக்கள். அந்த முழு அடைப்பு போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் தன்னுடைய பங்களிப்பை செலுத்தியதை பெருமையாக கருதுகிறோம். தமிழக விவசாயிகளுக்காக நடத்தப்பட்ட இப்போராட்டத்தில் கலந்தகொள்ளக் கேட்டு கடிதம் எழுதியும், போராட்டத்தில் கலந்து கொண்டமைக்கு நன்றிக்கடிதம் அனுப்பியும் அரசு ஊழியர்களை உற்சாகப்படுத்தியதோடல்லாமல், 25.4.2017ஆம் தேதி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது ஆறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தொடங்கிய காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக, தமிழக அரசு எங்களை உடனடியாக அழைத்தப் பேசி கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று ஊடகங்கள் வாயிலாக கோரிக்கை வைத்தமைக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தன்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது. தங்களைப் போன்று பல முனைகளிலிருந்தும் அரசுக்கு கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் காரணமாக தமிழக அரசு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தலைவர்களை 26.04.2017ஆம் தேதி அழைத்துப்பேசி ஜுலை 2017க்குள் எங்கள் கோரிக்கைகளின் பேரில் முடிவெடுப்பதாக உறுதி அளித்துள்ளதையும் மகிழ்வோடு தங்களிடம் பகிர்ந்து கொள்கிறோம்.

மக்கள் பணியில் சிறப்பான சேவையையும், சமூக நலனில் முழுமையாகன அக்கரையும் கொண்ட தமிழ்நாடு அரசு ஊழியர்கள், மக்களுக்கான போராட்டங்களில் என்றும் முன் நிற்பர்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(மு. அன்பரசு)**
பொதுச் செயலாளர்

©
GOVERNMENT OF TAMIL NADU
2017

Manuscript Series

**FINANCE (ALLOWANCES) DEPARTMENT**

**G.O.No.105, Dated 26.04.2017**

*(Hevilambi, Chithirai-13, Thiruvalluvar Aandu 2048)*

ALLOWANCES – Dearness Allowance – Enhanced Rate of Dearness Allowance from 1st January 2017 – Orders – Issued.

**READ** - the following papers:

1. G.O.Ms.No.309, Finance (Allowances) Department, dated, 16th December 2016.
2. From the Government of India, Ministry of Finance, Department of Expenditure, New Delhi, Office Memorandum No. 1/3/2017-E-II (B), dated, 30th March 2017.
3. From the Government of India, Ministry of Finance, Department of Expenditure, New Delhi, Office Memorandum No.1/3/2008-E-II (B), dated, 7th April 2017.

*****

**ORDER:**

In the Government Order first read above, orders were issued sanctioning revised rate of Dearness Allowance to State Government employees as detailed below:-

| Date from which payable | Rate of Dearness Allowance (per month) |
|---|---|
| 1st July 2016 | 132 per cent of Pay plus Grade Pay |

2. The Government of India, in its Office Memorandum second read above, has conveyed its decision to enhance the Dearness Allowance to its employees from the existing rate of 2% to 4% of the basic pay with effect from 01.01.2017.

3. The Government of India in its Office Memorandum third read above, enhanced the Dearness Allowances from the existing 132% to 136% with effect from 01.01.2017, to its employees continuing to draw their pay in the pre-revised pay band/grade pay as per Sixth Central Pay Commission recommendations.

4. The Government, after careful consideration of the Government of India's decision to enhance the Dearness Allowances to its employees

drawing pay in the pre-2016 scales of pay, has decided to enhance the Dearness Allowances of its employees by 4% with retrospective effect from 01.01.2017. Accordingly, the Government direct that the Dearness Allowances of the State Government employees be revised as indicated below:-

| Date from which payable | Rate of Dearness Allowance (per month) |
|---|---|
| **1st January, 2017** | **136 per cent of Pay plus Grade Pay** |

5. The Government also direct that (i) the arrears of the enhanced Dearness Allowances for the months of January to April, 2017 be drawn and disbursed immediately by existing cashless mode of Electronic Clearance System (ECS); and (ii) while working out the revised Dearness Allowance, fraction of a rupee shall be rounded off to next higher rupee if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

6. The Government further direct that the revised Dearness Allowance sanctioned above shall be admissible to full time employees who are at present getting Dearness Allowance and paid from contingencies at fixed monthly rates. The revised rates of Dearness Allowance sanctioned in this order shall not be admissible to part-time employees.

7. The revised Dearness Allowance sanctioned in this order shall also apply to the teaching and non-teaching staff working in aided educational institutions, employees under local bodies, employees governed by the University Grants Commission/All India Council for Technical Education scales of pay, the Teachers/Physical Education Directors/Librarians in Government and Aided Polytechnics and Special Diploma Institutions, Village Assistants in Revenue Department, Noon Meal Organisers, Child Welfare Organisers, Anganwadi Workers, Cooks, Helpers, Panchayat Secretaries in Village Panchayats under Rural Development and Panchayat Raj Department and Sanitary Workers drawing special time scale of pay.

8. The expenditure shall be debited to the detailed head of account `03. Dearness Allowance' under the relevant minor, sub-major and major heads of account.

9. The Pay and Accounts Officers / Treasury Officers shall admit and honour the bills, if otherwise found in order, without waiting for the authorization from the Accountant General (A&E), Tamil Nadu, Chennai-18.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT